திருவள்ளுவர்
ஆண்டு 2006
மாசி
1975 பிப்ரவரி

# அருளோசை

சமய பாட போதனைத் திங்களிதழ்



தமிழ்நாடு தெய்விகப் பேரவை
9, மகாராஜா சூரியராவ் சாலை,
சென்னை-600 018

ஆண்டுச் சந்தா ரூ. 5]

[தொலைபேசி : 76828

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

பழனி ஞானதண்டாயுதபாணியைப் பணிந்திட வாரீர் !
அழகான திருமுருகன் அருள் பெறவே திரண்டு வாரீர் !
செந்தேனும் பாலும் மணக்கும் சேயோனை வழிபட வாரீர் !
சந்தன விபூதி மணக்கும் திருமேனி கண்டு மகிழ வாரீர் !

முடிக்காணிக்கை தரத் தனியிடம் !
தங்குவதற்கேற்ற வசதிகள் !
முதியவரும் முடியாதோரும் முருகன் அருகே செல்ல
இழுவை ரயில் வசதி !
பொங்கியெழும் பேரழகனைத் தாங்கிவரும் தங்கரதம்
காண வசதிகள் !

அத்தனையும் செய்து அழைக்கிறது பழனித் திருக்கோயில். தமிழ்க்கடவுளாம் கந்தப்பெருமானின் அருள்பெற்று, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் கண்காணிப்பில் கீழே கண்ட நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

1. அருள்மிகு பழனியாண்டவர் கலைக்கல்லூரி
2. அருள்மிகு பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி
3. அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி
4. அருள்மிகு பழனியாண்டவர் செந்தமிழ்க் கல்லூரி
5. கார்த்திக்பள்ளி (ஆங்கிலப்போதனை)
6. செவிடர்பள்ளி
7. நாதசுரக் கல்லூரி
8. வேத ஆகமப்பாடசாலை
9. அன்புஇல்லம் (அநாதை விடுதி)
10. முதியோர் இல்லம்
11. குழந்தைகள் காப்பகம்
12. மருத்துவமனை

பழனித் திருமலையில் நாளும் பெருகிவரும் பக்தர்கட்குப் போதிய வசதிகள் செய்து தருவதற்காக 60 லட்சரூபாய் செலவில் மாபெரும் திருப்பணித் திட்டம் செயல்பட உள்ளது.

அறங்காவலர் குழு :

திரு. பு. மனோகரன், தலைவர், அறங்காலவர் குழு

அறங்காவலர்கள்

திரு. வி. வி. சி. ஆர். எம். கந்தசாமி, பி.எஸ்ஸி ,
திரு. என். நாச்சிமுத்து, எம்.எல்.ஏ.
திரு. புலவர் சி. பழனிச்சாமி, எம்.எல்.ஏ.
திரு. ஏ. பச்சையப்ப கவுண்டர்

வி. சௌ. கோதண்டபாணி, பி.எஸ்ஸி , பி.எல்.,
துணை ஆணையர் - நிர்வாக அதிகாரி

# அருளோசை



சமய பாட போதனை திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

| மணி 3 | ஆனந்த மாசி<br>1975 பிப்ரவரி | ஓசை 8 |
|---|---|---|

அருளோசை அன்பர்களுக்கு, வணக்கம்.

வரும், 11-3-75 அன்று மகா சிவராத்திரி விழா வருகின்றது. அருளோசை அன்பர்கள் அனைவரும் மிக்க சிறப்புடன் மகா சிவராத்திரி விழாவைக் கொண்டாடுவீர்கள் என நம்புகிறோம்.

திருக்கோயில்களின் சார்பாகவும் கிளைச் சங்கங்களின் சார்பாகவும் திருமுறை ஓதுதல்–சித்தாந்த விளக்கச் சொற்பொழிவுகள் முதலானவை இடைவிடாது நிகழ ஏற்பாடுகள் செய்து பயன்பெற வேண்டுகிறோம்.

மாணிக்கவாசகர் அருளிய சிவபுராணம் பேரவையின் வெளியீடாக 10 காசு அடக்க விலையில் வெளியிடப் பெற்றுள்ளது. உரிய தொகையை அனுப்பி வேண்டிய பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்.

## கருணை மழை பொழி, மேகமே......!

நீரிலே நீர்உற்ற நிறையிலே நிறையுற்ற நிலையிலே நுண்மைதனிலே!
நிகழ்விலே நிகழ்வுற்ற திகழ்விலே நிழலிலே நெகிழிலே தண்மைதனிலே
ஊரிலே அந்நீரின் உப்பிலே உப்பிலுறும் ஒண்சுவையிலே திரையிலே
உற்றநீர்க்கீழிலே மேவிலே நடுவிலே உற்றியல் உறுத்தும் ஒளியே!
காரிலே ஒருகோடி பொழியினும் துணைபெருக் கருணைமழை பொழிமேகமே!
கனகசபை நடுநின்ற கடவுளே! சிற்சபைக் கண்ணோங்கும் ஒருதெய்வமே!
தூரிலே பலமளித் தூரிலே வளர்கின்ற சுகசொருப மான தருவே!
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ் சோதிநட ராசபதியே!

—திருவருட்பிரகாச வள்ளலார்,

## இந்த இதழில்



கதை, கட்டுரைகளில் வரும் கருத்துக்களுக்கு, அவற்றை எழுதியவர்களே பொறுப்பு.

சிவராத்திரி அட்டைப்பட விளக்கம்

வேடன் ஒருவன் காட்டில் வேட்டையாடச் சென்ருன். புலியொன்று அவனைத் துரத்திக் கொண்டு வந்தது. புலிக்கு அஞ்சிய வேடன் ஒரு வில்வ மரத்தின் மீது ஏறிஞன். புலி கீழே காத்திருந்தது. இரவு வந்தது. தூங்கிஞல் கீழே விழுந்து விடுவோம் என்றெண்ணிய வேடன் தூக்கம் வராமல் இருக்க வில்வ இலைகளை ஒவ்வொன்ருகப் பறித்துப் போட்டுக் கொண்டிருந்தான். பொழுது விடிந்தது. புலியைக் காண வில்லை. அவன் இரவில் பறித்துப் போட்ட வில்வ இலைகள் ஒரு சிவலிங்கத்தின் மீது விழுந்திருக்கக் கண்டான். அன்று சிவராத்திரி. கீழே சிவலிங்கம் இருப்பதையும், அன்று சிவராத்திரி என்பதையும் வில்வ இலைகளைச் சிவலிங்கத்தின் மேல் போடுகிருேம் என்பதையும் அறியாமல் இரவு முழுவதும் விழித்திருந்த வேடனுக்கும் இறைவன் வீடு பேறளித்தான்.

---

# "அருளோசை"

## விஞ விடைப் பகுதி-ஜனவரி-75

### பரிசு பெற்றவர்கள்

| | |
|---|---|
| முதல் பரிசு : | திரு. கே. செல்லமுத்து. 9ஏ, நெ. 1, பிள்ளையார் கோவில் தெரு, பொன்னம்மா பேட்டை, சேலம்-1. சந்தா எண். 3487. |
| இரண்டாம் பரிசு : | திரு. கீரந்தை-சாரங்க—பக்கிரிசாமி, பி.ஏ., கீரந்தகுடி, செல்லூர், (அஞ்சல்), கொரடாச்சேரி (வழி), தஞ்சை மாவட்டம், சந்தா எண். 2840. |
| மூன்ரும் பரிசு : | திரு. ஆர். திருநாவுக்கரசு, 7, பட்டாளத் தெரு, காஞ்சிபுரம், 631503, சந்தா எண். 3016. |
| நான்காம் பரிசு : | திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ., ஜூனியர் அக்கவுன்ட்ஸ், ஆபீஸர் தமிழ்நாடு கரும்பு கூட்டுறவுக் கழகம், கூத்தநல்லூர், தஞ்சை மாவட்டம், சந்தா எண். 3145. |




*திருவளர் செல்வ, நல்வாழ்த்துக்கள் !*

இந்திய மெய்ப்பொருளியல்களுள் சாங்கியம் தொன்மையானது. சாங்கியம் பௌத்தத்திற்கும் முற்பட்டது. கபிலன் என்ற சான்றோர் சாங்கிய நெறியைக் கண்டவர். இன்று வழங்கும் சாங்கியக் கொள்கை இறையுண்மையை ஏற்கவில்லை. ஆனால், இறையுண்மையை ஏற்காத நிலை, காலப்போக்கில் வளர்ந்ததே தவிர, தொன்மைக்காலத்தில் இல்லை. சாங்கிய தத்துவத்தை விளக்கும் மூல நூல்கள் அழிந்துபட்டன. மிகப் பிற்காலத்தில் தோன்றிய ஈசுவர கிருஷ்ணன் இயற்றிய 'சாங்கிய காரிகை' என்ற நூல் மட்டுமே கிடைத்துள்ளது. இந்நூல் செய்யுள் வடிவில் அமைந்துள்ளது. அறுபத்தெட்டுச் செய்யுள்களே உள்ள இந்நூல் சாங்கியக் கொள்கைகளைத் தொகுத்தும் சுருக்கியும் உரைக்கிறது. சாங்கியம் உணர்த்தும் இரு அடிப்படைத் தத்துவங்களில் ஒன்று 'புருடன்'. பிறிதொன்று 'பிரகிருதி'. 'புருடன்' என்பது உயிர்கள். இவ்வுயிர்கள் என்றும் உள்ளவை; மாறாதவை; உறுதியானவை. உயிரின் தன்மை தூய உணர்வு. இத்தூய உணர்வுக்குப் புறப்பொருள் துணை அல்லது குறிப்புத் தேவையில்லை. உயிர்கள் எண்ணிறந்தன. 'பிரகிருதி' என்பது தோற்ற உலகின் பொருளியலையும், உள்ளத்தியலையும் தோற்றுவிக்கும் மூலப் பொருளாகும். பிரகிருதி தனி ஒரு பொருள். உலகத் தோற்றத்திற்கு மூலமும் அதுதான். உலகம் ஒடுங்குவதும் அங்கு தான்! ஆக, புருடன், பிரகிருதி இரண்டும் சாங்கியத்தின் மூல தத்துவங்கள்.

திருவளர் செல்வ, இந்திய தத்துவ இயல்கள் பெரும்பாலும் மாறுபடுவது மூலப்பொருள்களின் எண்ணிக்கையிலேயேயாம். "அடிப்படையில் பொருள் என எதுவுமில்லை"—இது பௌத்தம். "ஒன்றே ஒன்றுதான் மூலப்பொருள்"—இது வேதாந்தம். "மூலப்பொருள் இரண்டு"-இது சாங்கியம். "மூலப்பொருள் மூன்று"-இது சைவ சித்தாந்தம். திருவளர் செல்வ, சாங்கியத்தின் மூலக் கொள்கைகளில் ஒன்றாகிய பிரகிருதி என்ற பொருள் நிலையானது; எங்கும் நிறைந்திருப்பது. உலகத்தின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் இடனாக இருப்பது. காட்சிக்கு வெளிப்படும் உருவம் பொருளுக்கு இல்லை. அஃது உருவமற்றது. இங்ஙனம் உருவமற்ற ஒன்றைச் சாங்கியர் கண்டுபிடித்தது அனுமானத்தினாலேயாம். அனுமானத்தில் காண்பது ஏற்புடையதன்று என்று மறுக்க முடியாது. ஏன்? இன்றைய விஞ்ஞானிகளும் கூடச் சடப்பொருள்களின் தோற்றத்திற்கு மூலகாரணமான பொருள் கண்ணுக்குப் புலனாகாத சில பொருள்கள் என்று கண்டு கூறுகின்றனர்.

சாங்கியத்தின் மூலப் பொருளாய பிரகிருதி, சத்துவம், ராஜசம், தாமசம் ஆகிய குணங்களால் ஆயது. நடைபெறும் ஒவ்வொரு காரியத்திற்கும் காரணம் வேண்டுமென்பது பொதுவான உண்மை. ஆனால், சாங்கியர், காரண நிலையில் காரணம் உண்டு என்கின்றனர். காரியம், திடீரெனத் தோன்றுவதல்ல. எள் காரணம்; எண்ணெய் காரியம். சாங்கியக் கருத்துப்படி எண்ணெய், எள்ளில் முன்பே உள்ளது. அதுபோலவே நூலில் புடவையும், மண்ணில் பானையும் முன்பே உள்ளன. உள்ளதுதான் வரும். இல்லது தோன்றாது. இதனைச் சாங்கியர் சற்காரிய வாதம் என்பர்.


காரணத்திலேயே காரியம். மண்ணில் பானை இருக்கிறது என்றால், உற்பத்தி என்ற தொழில் ஏன்? குயவன் எதற்கு? அவன் செய்யும் தொழில் எதற்கு? மண்தான் பானை என்றால், காரணம்–காரியம் என்ற இரண்டு ஏன்? ஒன்று என்பதுதானே! மண் என்றும், பானை என்றும் வேறு வேறு பெயர் ஏன்? மண்ணில் பானை உள்ளது என்றால், மண்ணே சமையலுக்குப் பயன்படுமோ? பானைக்கும் மண்ணுக்கும் வடிவத்தில் தான் வேற்றுமை என்றால் காரணத்தில் இல்லாத வடிவம் காரியத்தில்

வருகிறது என்றாலே அது மண்ணில் உள்ளதல்ல என்பது தான் உண்மை என்று சற்காரிய வாதத்தை நியாய வைசேடிகர் மறுப்பர்.

தத்துவ இயல் என்றாலே விவாதம்தான்! வினா-விடை, மறுப்புக்கு மறுப்பு என்ற சுழற்சி தத்துவ இயலாளரை விடுவதில்லை. நியாய வைசேடிகரின் மறுப்புக்குச் சாங்கியர் விடை சொல்கின்றனர். காரியமாகிய பானை, அதன் காரணமாகிய மண்ணில் இல்லையானால் எந்த முயற்சியாலும் பானையை உற்பத்தி செய்ய முடியாது. காரியம், காரணத்தில் இருப்பதால் தான் குயவனுடைய முயற்சியில் பயன் கை கூடுகிறது. காரணமாகிய மண்ணில் கண்ணுக்குப் புலனாகாதிருக்கும் பானையைக் கண்ணுக்குப் புலனாகும் வடிவத்தில் தருகிறான் குயவன். காரணத்தில் இல்லாத ஒன்றைக் காரியத்தில் படைக்க முடியுமாயின் அதற்குக் காரணம் என்று ஒன்று வேண்டாமல்லவா? குயவன் பானையைப் படைக்க முடியுமானால் அதற்கு மண் ஏன்? என்பது சாங்கியர் விடை. பானையை வேறு எதிலிருந்தும் பெறலாம் அல்லவா? என்று சாங்கியர் மறுப்பர்.

சாங்கியர் இந்த சற்காரிய வாதத்தை, அதாவது, காரண நிலையிலேயே காரியம் இருக்கிறது என்ற கொள்கையை அவர்கள் வற்புறுத்துவது இறைவன் உலகை எதிலிருந்து சிருட்டித்தான் என்ற வினாவுக்கு விடையில்லாமற் போகவே தான்! சிலர், “இறைவன் எல்லாம் வல்லவன். அவனுக்கு உலகத்தைப் படைக்க மூலப்பொருள் தேவையில்லை,” என்று கூறுவர். ஆனால், சாங்கியர் இதை ஏற்பதில்லை. இல்லாததை உள்ளதாக்குதல் இறைவனாலும் இயலாதது என்பது சாங்கியர் முடிவு. அதாவது, மூலப்பொருளாகிய இறைவன் என்ற காரண நிலையில் உலகம் என்ற காரியம் தோன்றுகிறது என்பதுதான் சாங்கியர் கொள்கை. திருவளர் செல்வ, மேலும் தொடர்ந்து சாங்கியத்தைப் பற்றி எழுதுவோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.



# வருக! இராமேஸ்வரம்

இராமேசுவரம் தீவில் அமையப்பெற்றுள்ள அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில் மனம் கவரும் புராதன சிற்பக்கலைக் காட்சிகளுடனும், மிகப்பெரிய பிரகாரங்களையும் கொண்டதாக விளங்குகிறது. இராமாயண வரலாற்றுத் தொடர்பு கொண்டுள்ள இத்தலம் பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்ருக விளங்குவதுடன், வடக்கே காசியும், தெற்கே இராமேசுவரமும் என இந்துக்களுக்குத் தலைசிறந்த இரு பெரிய புண்ணிய தலங்களாகும்.

இத் திருக்கோயிலில் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. சேவார்த்திகள் வசதியாகத் தங்கவும், முறையாக வழிபடவும், இங்கு முக்கிய மாகக் கருதப்படும் இலக்குமண தீர்த்தம், தனுஷ்கோடி, கந்தமாதன பர்வதம் முதலான இடங்களுக்குப் போவதற்கு வசதியும் இக்கோயில் நிர்வாக அதிகாரியை அணுகுவதன் மூலம் அடையலாம்.

இக்கோயிலில் ஸ்ரீ இராமநாதசுவாமிக்கும், ஸ்ரீ பர்வத வர்த்தினி அம்பாளுக்கும் நடைபெறும் கோடி அர்ச்சனையில் சகஸ்ரநாமம் ஒன்றுக்கு ரூ. 10/- வீதம் கட்டணம் செலுத்தி அர்ச்சனை செய்து திருவருள் பிரசாதமும், வெள்ளிக் காசும் பெறலாம்.

இக்கோயிலில் நடைபெற்று வரும் மாபெரும் திருப் பணிக்குத் தாராளமாக நன்கொடை வழங்க வேணுமாய் வேண்டப்படுகிறது. இந்த நன்கொடைக்கு வருமானவரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இராமேசுவரம்,
தமிழ்நாடு.

நிர்வாக அதிகாரி
அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில்.




## வாய்மை

(தவத்திரு. குன்றக்குடி அடிகளார்)

வாழ்க்கையென்ற மாளிகைக்கு ஒழுக்கம் ஒளியூட்டுகிறது. அம் மாளிகைக்கு வளத்தை-வனப்பைச் சேர்ப்பது வாய்மையேயாம். நன்னெறியின் அடிப்படை வேறு. செயல்முறை வேறு. நன்னெறியின் அடிப்படை எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமை. அதுமட்டுமன்று, ஏற்புழி இன்பம் சேர்த்தல், இவ்வடிப்படை நியதிக்கு ஏற்றவாறு ஒழுகலாறுகள் அமையவேண்டும். ஒரோவழி ஒழுகலாறு அடிப்படை நன்னெறியோடு மாறுபடலாம். அங்ஙனம், மாறுபடும்பொழுது வழக்கத்தில் வந்த ஒழுகலாற்றுக்குப் பதில் நன்னெறியையே ஏற்றுக்கொள்ள வேண்டும். பகைவன் ஒருவன் துரத்திவர ஒருவன் அடைக்கலமாக வந்து சேர்ந்திருக்கிறான். தன்னிடம் அடைக்கலமாக வந்து ஒளிந்திருப்பவனை, பொய் சொல்லக்கூடாது என்ற நெறிவழி "இங்கே ஒளிந்திருக்கிறான்" என்று காட்டுவது நெறியாகாது. அது தோற்றத்தில் வாய்மைபோலத் தோன்றினாலும் வாய்மையன்று, "வாய்மை எனப்படுவது யாதெனின், யாதொன்றும் தீமை இலாத சொலல்" என்பார் வள்ளுவர். யாதொன்றும் தீமையிலாத சொலல் என்ற சொற்றொடர் எண்ணத்தக்கது. சொல்லினால் வரும் தீமைகள் அனைத்தையும் ஒருமுகப்படுத்திக் கூறுகின்றார். சொல், எளிதில் தோன்றுகிறது. ஆனால், நிறைந்த விளைவுகளை உடையது. ஆதலால், எளிதில் சொல்லாது எண்ணிச் சொல்லும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். நாம் சொல்லும் சொல்லால் யாருக்கும் எத்தகைய துன்பமும் வரக் கூடாது. அதுவே வாய்மை.

வாய்மை நிறைந்த சொற்களைச் சொல்லப் பழகுதலே ஓர் அரிய பயிற்சி. ஒருவரிடம் தகுதியல்லாதன கண்டால் அவரைத் தனியே அழைத்துத் தண்ணளி சேர்த்து இன்புறச் சொல்லி அத்தகுதியல்லாதன நீக்குதலே வாய்மை நெறி. மற்றோர் அறியத் தூற்றுவது வாய்மையாகாது. மற்றவருடைய புகழுக்கும் பெருமைக்கும்-உரிமைக்கும் உடைமைக்கும்-உணர்வுக்கும் பாதுகாப்பாக இருக்கும் சொற்களே வாய்மையுடைய சொற்கள். வாய்மையால் வையகத்திலுள்ளோர் நெருங்கி வாழ்வர்; நேசம் காட்டுவர். அகத்தூய்மை வாய்மையினாலேயே பெறமுடியும். அகத்தூய்மையை எடுத்துக்காட்டுவதும் வாய்மையேயாம். வாய்மை வழியின்றி அகத்தூய்மை பெறுதற்கோர் வழியில்லை. பகைவரையும் வாழ்த்தி, மறத்தன்மையில் செய்து முடிப்பதே

வாய்மையின் சீலம். பகைவரின் புகழுக்கு இகழ்ச்சி தரும் வகையில் பழிதூற்றுதல் வாய்மையாகாது. சொல்முறையில் பொய்போலத் தோன்றுவதும் கூட நன்மை விளைவிக்குமானால், அது வாய்மையேயாம். அன்பும் பாசமும் அகத்தினில் இல்லாது புறத்தே காட்டுதல் பொய். அது வாய்மையன்று. வாய்மை, வாய்வழி விளக்கமுறுவதன்று. நெஞ்சத்தில்-நெஞ்சத்தின் உணர்வில் விளக்கம் பெறுவது. அதுவே, புகழ் மிக்க வாய்மை. அதனாலேயே வாய்மையிற் சிறந்தது பிறிதொன்றுமில்லை என்றார் வள்ளுவர்.

வாய்மை, மனத்தில் தங்கவேண்டும். மனத்தில் வாய்மை கொண்டு வாழ்த்துவோர் வாழ்த்து, வையகத்தை நடத்தும். அச்சொற்கள் மந்திரத்திற் சிறந்த செம்பொருட் சொற்கள். இங்ஙனம், மனத்தில் வாய்மை தேக்கிப் பேசுவோர், தானம் செய்வாரினும், தவம் செய்வாரினும் உயர்ந்தோர். தானம் பிறர்நோக்கிச் செய்யப்பட்டாலும், அதன் நோக்கம் தான் சொர்க்கம் புகவேண்டும் என்பதே. ஆக, தானத்தின் நோக்கம் தற்சார்புடையது. தவம், முற்றுகத் தற்சார்புடையது, அதனால்தான் போலும் சில ஆண்டுகள் தவம் பயிற்றியோர் உலகியலுக்கு வந்தபோது முரண்பாடுகளின் மொத்த உருவமாயினர். அவர்களால் மற்றவர்களுக்கு விளைந்தது தீங்கே! காரணம், தற்சார்பிலேயே சுழன்ற மனம், பிறர்நலம் எண்ண மறுக்கிறது. ஆனால், வாய்மை பிறருக்குத் தீங்கு செய்யாத நோக்கத்தில் முகிழ்க்கிறது. பிறரை இன்புறுத்தலில் வளர்கிறது. அவ்வழி தானும் வளர்கிறது, இந்த வாய்மை, தவத்தினும் சிறந்தது. வாய்மை வழி வாழப் பயிலுவோமாக. எவ்வுயிர்க்கும் தீமையிலா அன்பு காட்டுவோமாக! அதுவே, வாய்மையின் ஊற்று! வாய்மை வழியே வள்ளுவர் வழி.

௨

சிவமயம்

# திருவருட்பயன் ஆராய்ச்சி

## சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

சைவ சந்தானசாரியருள் ஒருவராய ஸ்ரீமத். உமாபதி சிவாசாரியார் அருளிய திருவருட்பயனுள் 10, 13, 19, 28, 32, 38, 46, 56, 61, 84, 89, 91 ஆம் எண்ணுள்ள திருக்குறள் வெண்பாக்கட்குச் செம்பொருள் சிலருரையில் இல்லை. அவற்றுள் ஈற்றிற் குறித்த எண்ணுள்ள,

ஓங்குணர்வி னுள்ளடங்கி யுள்ளத்து ளின்பொடுங்கத்
தூங்குவர்மற் றேதுண்டு சொல்

என்பதற்கு நிரம்ப வழகிய தேசிகர் அருளிய உரை பொருந்துகின்றது. 'சிந்தனையுரை உள்ளத்தில் இன்பு ஒடுங்க' என்பதற்கு வேறு கூறுகின்றது. 'தம்மிடத்திலே யுண்டான கெற்சிதமுங்கெட' என்ற அது பொருந்துவதன்று. ஸ்ரீ சிவஞான பாடியத்துள், (சமாஜப் பதிப்பு. பக்கம் 560. சூ. கக. அதி. க. முடிவு) "தற்போதம் முனையாதவாறு பரிகரித்துச் சிவஞானத்துள்ளடங்கிச் சிவாநுபவஞ் சுவாநுபூதிக மாம்படி ஞான நிலையிலுறைத்து நிற்றல்" என்றதை அக்குறட்குஞ் சார்த்தியுணர்த்திய தால், ஆசிரியர் ஸ்ரீ சிவஞான மாமுனிவரர் குறித்த பொருள் நிரம்ப வழகிய தேசிகர் கூறியதோ டொத்துளது. அன்றியும், சிவப்பிரகாசத்துப் பதினொன்ருவது சூத்திரத்து முதல் திரு விருத்தமான,

" தீங்குறு மாயை சேரா வகைவினை திரிவி தத்தால்
நீங்கிட நீங்கா மூல நிறையிருள் இரிய நேயத்
தோங்குணர் வகத்த டங்கி உளத்துள் இன் பொடுங்க நேரே
தூங்குவர் தாங்கி ஏகத் தொன்மையிற் றுகளி லோரே"

என்பதில், அத்திருவருட்பயனது (குறட்பாப்) பொருளை இனிது விளக்கி யிருத்தல் காண்க. திருவருட்பயனுக்கு நிரம்ப வழகிய தேசிகர் அருளிய உரையே பெரிது சிறந்தது. அவருரை சில இடத்தில்தான் வழுவுற்றுளது. முதலில்,

" ஆசினவா நாப்பண் அடையா தருளினல்
வாசியிடை நிற்கை வழக்கு" (89)

என்னுந் திருவெண்பாப் பொருளை ஆராய்வாம்.

திருவைந்தெழுத்து எனப்படுவன (1) இறை (2) சத்தி (3) பாசம் (4) எழில் மாயை (5) ஆவி ஆகும். நான்காவது எண்ணு முறைமைக் கண் நின்ற மாயை நகரத்தாற் குறிக்க நிற்பதாதலின் அத் திரோதமும் ஆண்டையதே என்பது, "திருவெழுத்தைந்தில் ஆன்மாத் திரோதம் ஆசு அருள் சிவம் சூழ்தர நடுநின்றது" என்னுஞ் சிவப்பிரகாசத்தால் விளங்குவது உணர்க. (மாபாடியம். பக்கம். 380. சூ. 5. அதி. 1.)

அவ்வைந்தனுள் ஆவி (ய) என்பது திரோதம் (ந) அருள் (வ) என்னும் இரண்டற்கும் இடையே அடையாமையும், அருள் (வ) சிவம் (சி) என்னும் இரண்டற்கும் இடையே அடைதலும் வேண்டும் என்பதே அத்திருக்குறளின் பொருளாகும். நவாநாப்பண் அடைதற்கு ஆசு துணையாயிற்று. வசிநாப்பண் அடைதற்கு அருள் துணையாயிற்று. 1. ஆசின் அடையாது 2. அருளினால் நிற்கை என்பவை அதை உணர்த்துதல் அறிக. 1. அடைதலுக்கு ஆசும் 2. நிற்கைக்கு அருளும் துணையாதலால், (அ) உயிர்க்கு அவ்விருதுணையுள் வேண்டுவது முன்னதன்று. பின்னதே என்று பிரித்துணர்த்தும் பொருட்டும், (ஆ) வேதாகம வழக்கு ஆசு துணையாதலைக் குறித்திலது, அருள் துணையாதலையே வற்புறுத்திற்று என்பதை வலியுறுத்தும் பொருட்டும் 'வழக்கு' எனத் தெளிவுறுத்தி யருளினர் ஆசிரியர். அடையாது என விலக்கியும் நிற்கை என விதித்தும் இருத்தல் அறிக.

இத்திருப்பாட்டில் 'ஆசு' என்பதற்கு மலம் எனப் பொருள் கொள்ளல் வேண்டும். ஆசின்-மலத்தால், இவ்வாறு இன்னுருபாக் கொள்ளாமல், ஆசு இல் எனப்பிரித்து, 'குற்றம் தீர்ந்த (திரோதானம்) என்று பொருளுரைத்தது சிறிதும் பொருந்தாது நிற்றற்கு 'அருளினால்' என ஏதுக் கூறினாற் போன்று, அடைதற்கு 'ஆசின்' என ஏதுக் கூறினாராதலாலும், ஆசிரியர் 'ஆசு' என்னும் சொல்லை மலம் என்னும் பொருளில் ஆளும் வழக்க முடையவராதலாலும் யாம் உரைத்ததே செம்பொருள் என்க.

"யானும், அருத்திமிக உரைப்பன்வளர் விருத்தம் நூறும்
ஆசில்சிவம் பிரகாசம் ஆகும் என்றே" (12) என்பதில்

ஆசின்மை (அமலம்) சிவப்பிரகாசத்திற்கு அடையாதல் உணர்க. இத்திரு விருத்தத்திலும் 'அன்றே' எனப் பிழைபடப் பாடங்கொண்டு வினைமுடிபு கெடச் செய்தனர். 'என்று உரைப்பன்' என முடிதலை அவர் அறிந்திடுவாரேல், அது செய்யார். (1) "ஆசிலா ஆன்ம லாபம்" (72). (2) முற்குறித்த "திருவெழுத்தைந்தில் ஆன்மாத் திரோதம் ஆசு அருள் சிவம் சூழ்தர நடுநின்றது" (92). (3) "ஆசுறு திரோத மேவாதகலுமா சிவமுன்னாக ஓசைகொள்" (93), (4) "ஆசுடன் அடங்கப் போக்குமவன்." திருவருட்பயன். (4), (5) "ஆசு ஆதியேல் அணவ காரணம் என்?" (28), (6) "ஆசில் உருவம்" (88), (7) 'ஆசில் எழில் தடித்தயர' (கோயிற் புராணம். 9) என்று மலம் என்னும் பொருளில் ஆசிரியர் ஆசு என்னும் சொல்லை ஆண்டிருத்தல் காண்க.

திரோதானத்துக்கும் அருளுக்கும் நாப்பணிருத்தலாவது: நிவிர்த்தி மார்க்கத்தில் ஒழுகாது பிரவிர்த்தி மார்க்கத்திலொழுகிக் கொண்டு, பூதமும், பொறியும், கரணமும் போன போக்கில் தானுஞ்சென்று, தனக்குள் இருந்து திரோதானத்திற்கேற்ப உபகரித்துவரும் அருளை மறந்து, தான் திரோதானத்துள் அடங்கி, அது செலுத்தும் மல நடையை மேன்மேலும் விரும்பி, நிலை நிலையாமை யுணர்ச்சியின்றிப் பற்றறாது துயருறல்.

அருளுக்கும் சிவத்துக்கும் இடை நிற்றலாவது: நிலை நிலையாப் பொருளுணர்ந்து, பற்றற்று, பசுகரணம் சிவகரணமாகப்பெற்று, வஞ்சப் புலனைந்தின் வழியடைத்து, பாசஞானம், பசுஞானம் இரண்டும் ஒழித்துச்

சிவஞானத்தாலே மண்முதற் கரணமெல்லாம் அசத்தெனக் கண்டு, அவ்வோங்குணர்வினுள் அடங்கி, அடங்கிய தன்னுள் இன்பம் ஒடுங்கத் தூங்குதல்.

ஆசுறு திரோதம் மேவாது அகலும்வண்ணம் சிவமுதலாகத் திருவைந்தெழுத்தைச் சுத்தமானதத்தால் ஓசை கொண்டால், அத் திரோதம் ஆசினை ஒழித்து அருளாயோங்கி, அருணடையை உயிர்க்கு ஆக்கும். மலநடை தவிர்ந்த உயிர் மீண்டும் அது சிவத்தை அருளும் வண்ணம் அவ்விருளைப் பற்ரு நின்று மற்றுப் பற்றின்றிக் கிடந்தால், இம்மையிலேயே சிவத்தினில் ஏகமாகும். இங்கு,

"மாலார் திரோத மலமுதலாய் மாறுமோ
மேலாசி மீளாவிடின்"

"விரியமந மேவியவை மீளவிடா சித்தம்
பெரியவினை தீரிற் பெறும்,"

"ஆராதி யாதாரம் அந்தோ அதுமீண்டு
பாராது மேல்ஓதும் பற்று"

"சிவமுதலே யாமாறு சேருமேல் தீரும்
பவம்இதுநீ ஓதும்படி"

"வாசி அருளியவை வாழ்விக்கும் மற்றதுவே
ஆசில் உருவமும் ஆம்அங்கு"

என்னுந் திருவருட் பயனிலுள்ள திருப்பாடல்களை இங்கு உய்த்துணர்தல் நன்று.

"ஆசாதி யேலணைவ காரணமென் முத்திநிலை
பேசா தகவும் பிணி" 28

என்ற திருவெண்பாவுள் "அகவும் பிணி" என்னும் பாடம் பொருந்துவதாக இல்லை. அகவுதல் என்பதற்குக் கவர்ந்து கொள்ளுதல் என்ற பொருள் தமிழில் யாண்டுமில்லை. திருவருட் பயனுக்கு உரையிட்டருளிய சான்ரோருள் ஒருவராய நிரம்பவழகிய தேசிகர் அகவும் பிணி எனக் கொண்டிருந்தாரெனக் கருதச் சிறிதும் இடம் இன்று. அவர் 'கவர்ந்து கொள்ளும்' என உரையிட்டருளியதால், அவர்க்கு அகவும் என்பது பாடம் அன்று. 'உரையாடாது கவர்தல்' என விசேடக் குறிப்பிற் காட்டித், 'தோன்ருது விரைவிற் கவர்தல்' என விளக்கமுஞ் செய்தார்.

சிந்தனையுரையாளர் 'மீளவும் வந்து பொருந்தும்' என்றருளினர். இவ்வுரைக்கும் அகவும் என்ற பாடம் பொருந்துகின்றிலது. சைவத் திருவாளர் சு. சிவபாத சுந்தரம் பிள்ளை அவர்கள் பி.ஏ., எழுதியவுரையில் 'அகவும்-திரும்பவும் பிடிக்கக்கூடும்' என்றுளது. இதில் பிடித்தல் என்பதற்கு அகவல் உரித்தாகாது. பிடித்தலுக்கு ஏற்றவாறு அஃது அமைந்திருந்ததே எனினும், அகவும் எனல் பிழையுற்றதேயாகும்.

திருநெல்வேலிப்பேட்டை, (புகழுடலெய்திய) ஆ. ஈசுவரமூர்த்திப் பிள்ளை அவர்கள் (பதவுரை கருத்துரைகளுடன் கூடிய) பதிப்பில் அகவும் என்பதற்கு "(ஆன்மாக்களை) வந்து பந்தித்துக் கொள்ளும்" என்ற உரை காண்கின்றது. ஆண்டும் அகவும் எனல் பந்தித்துக் கொள்ளும்

என்பதற்கு ஏற்றது அன்று. புகழுடலெய்திய J. M. நல்லசாமி பிள்ளை B.A., B.L., எழுதிய ஆங்கிலவுரையில் "Such darkness may cover it" என்று இருக்கின்றது. இவ்வுரைகள் எல்லாவற்றையும் நோக்கினால் 'அகவும்' என்ற பாடம் பொருந்தாது என்று தெள்ளிதின் விளங்கும். விளங்கவே அதன் உண்மைப் பாடம் யாதென்று ஆராய்தல் வேண்டும். கவர்தல், பிடித்தல், பந்தித்தல் என்ற பொருளை நோக்கின் அதன் உண்மையுருவம் புலப்படும்.

நிரம்பவழகிய தேசிகருரையே உண்மைப் பாடத்திற்கு ஏற்றது என்றும் அவர் காலத்தில் அப்பாடம் பிழைபட்டில தென்றும், பின்னோர் பலரும் உண்மைப் பாடத்தை யுணராமல் இடத்திற்கேற்ப பொருள் கொண்டன ரென்றும் பொருளுணர்வு தோன்ற எழுதினரல்ல ரென்றும் அத்திருக்குறளை அவர் காட்டிய வடிவத்தாலுணரலாம். 'அகவும்' என்ற பிழைபட்ட பாடத்தின் முன்பு, நிரம்பவழகிய தேசிகர்க் கும் அவர் முன்னோர்க்கும் 'கவ்வும்' என்ற பாடமே இருந்த தெனல் இனிது விளங்குகின்றது. அதனாற்றான் அவர்தம் உரையுள் 'கவர்ந்து கொள்ளும்' என்று பொருள் எழுதினர். அடுத்த குறளில் ஒளி கவராதேல் என்றுள்ள பொருத்தமும் காண்க. 'பேசாது கவ்வும் பிணி' என்ற பாடமே உண்மைப் பாடம் என்பதற்கு மெய்கண்ட சாத்திரங்களிலேயே மற்றோரிடம் சான்றாக நிற்கின்றது. அஃது உண்மை நெறியின் மூன்றாவது திருவிருத்தமான,

"எவ்வடி வுகளுந்தானா மெழிற்பரை வடிவதாகிக்
கவ்வியமலத்தான் மாவைக் கருதியே யொடுக்கி ஆக்கிப்
பவ்வமீண்டகலப் பண்ணிப் பாரிப்பான் ஒருவன் என்றே
செவ்வையே உயிருட்காண்டல் சிவரூபம் ஆகும் அன்றே"

என்பதிற் "கவ்வியமலம்" என்றுளதாம். அந்நூலும் திருவருட் பயனை அருளிய ஸ்ரீமத் உமாபதி சிவாசாரியராலேயே செய்தருளப் பெற்றது என்பது முன்னோர் பலர் கொள்கையாதலின், ஆசிரியர் திருவாக்கு ஈரிடத்திலும் ஒற்றுமைப்பட்டு நின்றன எனலாம். உண்மைநெறி என்பது (ஆறே திருவிருத்தம் உடைய) ஞானப்பனுவலின் பெயர். அதன் உரைக்கே உண்மை நெறி விளக்கம் என்பது பெயர். அது தனிக் கட்டுரையில் விளக்கப்பட்டதுணர்க. 'அகவும்' என்றது பிழை யுடையது எனல் உறுதியாகும். தாயுமானவர் சின்மயாநந்தத்துள், "கவ்வுமலமாகின்ற நாகபாசத்தினாற் கட்டுண்ட உயிர்கள் மூர்ச்சை கடிநகல வலியவரு ஞானசஞ்சீவி" எனக் குருவை உணர்த்துவதறிக. மலநாகம் கவ்வுமென்ற நயத்தையறிந்தால் அப்பாடத்தின் பொருத்தம் புலப்படும். 'கவவு-அகத்திடுதல்' கவவும்-அகத்திடும். கவ்வும் என்பது அதன் மரூஉ. இது தொல்காப்பியம் அறிந்தார்க்கு வெளிப்படும்.

அருளிற் பெரிய தகிலத்து வேண்டும்
பொருளிற் றலையிலது போல்

என்றுளது. இதனுள் முதலடி மூன்றாவது சீர் 'அகிலத்தில்' என்றிருத் தற்பாலது. சில பதிப்புகளில் மட்டும் 'அகிலத்தில்' என்றே காணலாம். பல பதிப்புக்களுள் 'அகிலத்து' என்ற பாடத்தைக் கொண்டு பெரியது என்னும் எழுவாய்க்கு ஒரு பயனில காணாது, பயனிலையெனத் தடுமாறிய நிலை காணலாம். 'உலகத்தில்லை' என்ற அதனுரை (நி. அ. தே.)யை நோக்கி யுணர்க. அகிலத்து இல்-உலகத்தில்- இல்லை.

(தொடரும்)




## சிவபெருமானின் திருவுருவங்கள்

புலவர் திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

திரிபுராந்தகர் : (முன்தொடர்ச்சி)

முன்னொரு காலத்தில் தாரகாசுரன் என்பவனின் புதல்வர்களாகிய தாரகாட்சன், கமலாட்சன், விந்துன்மாலி என்னும் அசுரர்கள் மூவரும் பெருந்தவம் புரிந்து, பறந்து திரிந்துலவும் தன்மையுடையனவும், பொன், வெள்ளி, இரும்பு என்பவற்றால் அமைந்தனவுமாகிய மூன்று பெரும் கோட்டைகளைப் பெற்றனர். அவற்றைக் கொண்டு அம் மூவரும், தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பெருங் கொடுமைகள் புரிந்து வந்தனர். அவர்களின் செருக்கை அடக்கி அழித்தருளச் சிவபெருமான் திருவுளம்கொண்டு, தேவர்களெல்லோரும் படைகளாகவும், சூரிய சந்திரர்கள் சக்கரமாகவும், உலகம் தேராகவும் அமைய, அத்தேரின்மீது ஏறித் திரிபுர அசுரர்கள்மீது போர் செய்யப் புறப்பட்டார். அப்போது தேவர்களெல்லாம் இவர் நம்முடைய துணையைக் கொண்டன்றோ, போர் புரியச் செல்கின்றார்; நம்முடைய உதவியின்றி இவர் திரிபுர அசுரர்களை அழிக்க இயலுமோ? என்று எண்ணிச் செருக்குற்றனர். இதை அறிந்த சிவபெருமான், தேவர்களின் அறியாமையை நினைந்து ஒரு சிறிது புன்முறுவல் தோன்றச் சிரித்தார். அச்சிரிப்பினாலேயே திரிபுரங்களும் அழிந்தன. திரிபுர அசுரர்களும் எரிந்து சாம்பலாயினர். இங்ஙனம் சிவபெருமான் திரிபுரங்களை அழியச் செய்தருளிய நிலையே, திரிபுராந்தகமூர்த்தம் எனப்படும்.

" அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரம் ஆவது மும்மல காரியம்
அப்புரம் செற்றமை யார்அறி வாரே ".

— திருமந்திரம்.

அர்த்தநாரீசுவரர் :

முனிவர்களிற் சிறந்த பிருங்கி என்பவர், ஒரு சமயம் திருக்கயிலைக்குச் சென்றார். அங்கே சிவபெருமானும் உமாதேவியாரும் ஒருங்கே எழுந்தருளியிருந்தனர். பிருங்கி முனிவர் அவ்விருவரையும் ஒருசேர வணங்காமல், அம்மையை விட்டுவிட்டுச் சிவபெருமானை மாத்திரம் வணங்கித் துதித்தனர். வண்டின் உருவம் கொண்டு உமாதேவியாரை நீக்கிச் சிவபெருமானை மாத்திரம் வலம் வந்து பணிந்தனர். இதுகண்ட அம்பிகை, தாம் சிவபெருமானின் வேருகப் பிரிந்த தனி உருவம் கொண்டிருத்தலினன்றோ, இங்ஙனம் நிகழ்ந்தது என எண்ணி, தாம்

இறைவனோடு பிரிவறக் கலந்து ஒன்றி நிற்கும் பெருநிலை பெற விரும்பித் தவம் புரிந்தனர். அத்தவத்திற்கு உவந்த சிவபெருமான், அம்பிகையைத் தம்மிற் பிரிவறத் தம்முடைய இடப்பாகத்திற் பாதியளவு இடம் கொடுத்து, என்றும் தம்முடன் ஒன்றியிருக்கும் நிலையில் ஏற்றுக்கொண்டருளினர். இங்ஙனம் ஒரு திருமேனியில் வலப்பாதியில் சிவபெருமானும், இடப்பாதியில் அம்பிகையுமாக ஒருவரை ஒருவர் பிரிக்க இயலாமல் விளங்கும் நிலையே அர்த்தநாரீசுவர மூர்த்தம் எனப்படும். ஒரு பாதி ஆணும் மறுபாதி பெண்ணுமாகப் பிரிவின்றி வடிவம் கொண்டிருக்கும் இத்திருவுருவினை 'மாதியலும் பாதியர்' எனவும், 'அம்மையப்பர்' எனவும் உலகம் போற்றும். 'அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்' என்னும் நிலையில், இறைவன் ஒருவனே எல்லா உயிர்களுக்கும் தாயும் தந்தையுமாக இருந்து உதவி புரிந்து வரும் உண்மையினை, இத்திருவுருவம் குறிக்கின்றது. உலகிற் சமுதாய வாழ்க்கையானது, ஆண் பெண் இருபாலாரும் சம நிலையிற் கூடி ஒருவருக்கொருவர் இன்றியமையாதவராய், அன்பினால் இயைந்து ஒன்றுபட்டு, ஒருவரோடொருவர் உற்ற துணையாய் வாழ்ந்து நலம் பெறுதல் வேண்டும் என்னும் உயரிய உண்மையினை இத்திருவுருவம் விளக்குகின்றது*. தமிழ் நாட்டில் திருச்செங்கோடு என்னும் தலத்தில் அர்த்தநாரீசுவரர் திருவுருவம், தானே தோன்றியதாகச் சிறந்து விளங்கி வருகின்றது. இதனை இறைவனின் 'தொன்மைக்கோலம்' என்று மாணிக்கவாசகரும், 'முதல்உரு' என்று அருள்நந்தி சிவாசாரியாரும் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

"பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று; அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்"

— புறநானூறு.

"நில மேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே"

— ஐங்குறுநூறு

சோமாஸ்கந்தர் : சிவபெருமான் உமாதேவியாருடன், தம் இருவருக்கும் இடையில் கந்தன் என்னும் முருகப் பெருமான் இருக்கும் நிலையில் எழுந்தருளி விளங்கும் திருவுருவமாகும். இத்திருவுருவத்தை வழிபடுவோர் கணவனும் மனைவியுமாக மக்கட்பேறுடன் இனிய குடும்ப வாழ்வின் நலங்களைப் பெறுவர், என்று நூல்கள் கூறுகின்றன. இது பற்றியே, எல்லாச் சிவாலயங்களிலும் சோமாஸ்கந்த மூர்த்தம் எழுந்

---

* The image of Artha Nariswara is India's recognition of the mutual relationship of man and woman, the idea of the Co-operative, interdepedent, separately incomplete but mutually masculine and feminine function.

The husband and the wife are to each other the best of friends, the essence of all desires, the very life itself. So is the husband to the wife and the wife to the husband.

— Dr. S. Radhakrishnan.

தருளச் செய்து வழிபடப் பெறுகின்றது*. திருவாரூரில் எழுந்தருளி யுள்ள தியாகராசப் பெருமான் சோமாஸ்கந்த மூர்த்தியேயாவர். காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், திருமறைக்காடு, திருப்புள்ளிருக்கு வேளூர் முதலிய பழம்பெரும் தலங்களிலெல்லாம் கருவறைச் சுவரில் சிவலிங்கத்துக்குப் பின்னர்ச் சோமாஸ்கந்தரின் அழகிய சிற்பம் அமைக்கப்பெற்றிருத்தலைக் காணலாம். இறைவனுக்குரிய சிறப்பியல்பு களாகக் கூறப்பெறும் சத்து சித்து ஆனந்தம் என்பவற்றுள், சிவம் சத்தாகவும், அம்பிகை சித்தாகவும் கந்தன் அல்லது முருகன் ஆனந்த மாகவும் திகழும் பெற்றியை விளக்குவது, சோமாஸ்கந்த மூர்த்தம் எனலாம். இங்ஙனமே, உமாதேவியார் அருகிருக்கச் சிவபெருமான் தனது தொடையின்மீது விநாயகரை அமர்த்திக் கொண்டு வீற்றிருக்கும் நிலை, 'விக்கினப் பிரசாதர்' என்னும் திருவுருவமாகும்.

"ஏலவார் குழல் இறைவிக்கும்
எம்பிரான் தனக்கும்
பாலன் ஆகிய குமரவேள்
நடுவுறும் பான்மை,
ஞால மேல்இரவி னோடு
பகலுக்கும் நடுவே
மாலை யானதொன்று அழிவின்றி
வைகுமாற தொக்கும்"
— கந்தபுராணம்.

சந்திரசேகரர் :

பிரமதேவரின் புதல்வனாகிய தக்கன் என்பவன், தன் புதல்வராகிய இருபத்தேழு நட்சத்திரங்களையும், சந்திரனுக்கு மணம் செய்து கொடுத் தான். அப்போது தன் மகளிர் அனைவரையும் சமநிலையில் வைத்து அன்புகாட்டி வாழ்ந்து வருமாறு தக்கன் சந்திரனுக்கு அறிவுரை கூறி யிருந்தான். ஆனால் சந்திரனோ உரோகிணி, கார்த்திகை என்னும் இரு மனைவியரிடத்தில் மட்டுமே பெரும் காதல் கொண்டு, ஏனையரைப் புறக்கணித்து ஒழுகினான். அதனால் சினம் கொண்ட தக்கன், சந்திரனைச் சபித்தான். அதன் விளைவாக அவனது கலைகள் ஒவ்வொன்றாகத் தேய்ந்து வந்தன. சந்திரன் ஒளியும் சிறப்பும் இழந்து வருந்தி நின்றான். சிவபெருமானிடம் சென்று, தன்னைக் காத்தருளும்படி வேண்டி அடைக் கலம் புகுந்தான். தன் குற்றங்களை உணர்ந்து வருந்தினான். திருவடி

* "The form of siva in the Somaskanda type is, as far as I can see, confined only to Tamil Nadu. what I want to convey is that a scene of supreme domestic felicity with the husband Siva on one side and the wife Uma sitting or standing near to his left with the ever-boy Kumara-skanda sitting or standing as a tiny child between them, is seen only or mostly in the seulptures of Tamil nadu. Domestic felicity and repose have come to be concentrated, ironically enough, in Siva, the deity associated with cremation-ground and bizarra tastes, complete unworldliness and so on with all negations of positive bliss as humans of highest morals understand it.

— *Prof. G. S. Gurye,*
*Gods and men.*

யில் வந்து வீழ்ந்து வணங்கி அடைக்கலம் புகுந்த சந்திரன்பால், சிவ பெருமான் இரக்கம் கொண்டார். அவனைக் காப்பாற்றினார். அம் மட்டோ! தம் காலில் வந்து விழுந்தவனை எடுத்துத் தம் தலையின்மீது வைத்துச் சூடிக்கொண்டார். நம்மை வணங்குபவர்கள் எல்லாம் அவனையும்கூட வணங்கும்படி செய்துவிட்டார். மனிதர்கள் தவறுகள் பல செய்துவிட்டாலும், அவற்றை உணர்ந்து வருந்தி மனம் திருந்தித் தன்னை வந்தடைந்தால், இறைவன் அவர்களைக் காப்பாற்றியருள்வான் என்னும் பெரிய சிறந்த உண்மையினை விளக்குவது, சந்திரசேகரர் என்னும் திருவுருவமாகும்.

"நெற்றியிற் கண்ணுடை நிமலத் தெம்பிரான்
உற்றவர்க் கருள்புரி கின்ற உண்மையைத்
தெற்றென உணர்த்தல்போல், திங்களின்கலை
கற்றையஞ் சடைமிசைக் கவின்று பூத்ததே."

— கந்தபுராணம்.

பிட்சாடனர் :

தாருகவன முனிவர்களின் செருக்கை அடக்குவதற்காகச் சிவ பெருமான் ஏற்றருளிய திருவுருவமே பிட்சாடனர் வடிவமாகும். சிவ பெருமான் எல்லா உலகங்களுக்கும் தலைவன். அரசர்களுக்கெல்லாம் தலைசிறந்த பேரரசன். செல்வர்களில் எல்லாம் மேலான மாபெரும் செல்வன். அத்தகைய பெருநலஞ்சான்ற சிவபெருமான், மிகவும் எளிய நிலையில் ஒரு பிச்சைக்காரன் போல வடிவம் கொண்டு எழுந்தருளும் எளிய இனிய திருவுருவமே பிட்சாடன மூர்த்தமாகும். 'எல்லாச் செல்வங்களையும் உடைய அவன், ஏதும் இல்லாத வறியவன்போல வருகின்றான். எல்லாத் தன்மையும் சிறப்பும் வாய்ந்த அவன் ஒரு எளியவன் போலத் தோன்றுகின்றான். வேண்டுவோர் வேண்டுவன எல்லாம் ஈயவல்ல வள்ளலாகிய அவன், ஏற்று இரந்து உண்டு உழலும் எளிய பிச்சைக்காரனாகக் காட்சி அளிக்கின்றான். இறைவன் தான் ஒரு பெரும் செல்வனும் ஒப்பற்ற பெருந் தலைவனும், இணையற்ற பெரு வள்ளலுமாக இருந்தபோதிலும் ஒருவகையில் தான் மிகப் பெரிய பிச்சைக்காரனாகவே இருத்தலை விரும்புகின்றான். அவன் நம்மிடம் அன்புப் பிச்சை பெற விரும்புகின்றான் என்னும் இனிய தத்துவத்தை உணர்த்துவதே பிட்சாடன வடிவம் எனலாம்*.

(தொடரும்)

* "Hindu mythology looks upon God an an eternal beggar waiting for the opening of the door that he may enter into the darkness and illumine the whole horizon of our being as with a lightning flash. It is not so much man seeking God as God seeking man. He goes out into the dangers of the wilderness to lead us out of it. God so loves the world that he gives himself to it. He expects us to recognise and respond to his call and co-operate with him. He wants us to look upon him as our friend, lover and comrade. He is for ever saving the world:

— *Dr. S. Radhakrishnan,*
*An Idealist View of life.*




## திருக்குற்றாலம்

திரு. கே. எஸ். நரசிம்மன், பி.ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ்.,
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை.

முன்னுரை :

பாண்டிய நாட்டிலுள்ள பாடல் பெற்ற தலங்கள் பதினான்கு. அவைகள் : திருஆலவாய், திருஆப்பனூர், திருவேடகம், திருக்கொடுங்குன்றம், திருப்புத்தூர், திருவாடானை, திருப்புனவாயில், திருக்கானப்பேர், திருப்பூவணம், திருச்சுழியல், திருப்பரங்குன்றம், திருநெல்வேலி, திருக்குற்றாலம், திருக்குறும்பலா என்பனவாகும். இப்பதினான்கு தலங்களுள் ஒன்றாகத் திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகம் பெற்றுச் சிறந்து விளங்குவது திருக்குற்றாலம் என்னும் தலமாகும். குற்றாலம் என்னும் ஒருவகை மரங்கள் மிகுந்து விளங்குவதனால், இதற்குத் திருக்குற்றாலம் எனப்பெயர் வழங்குவதாயிற்று. மாயூரத்திற்கு அருகில் உள்ள ஒரு தலத்திற்கும், தற்போது குற்றாலம் (குத்தாலம்) எனப் பெயர் வழங்கி வருகின்றது. அதற்குப் பழைய பெயர் 'திருத்துருத்தி' என்பது.

" திருத்துருத்தி மேயானைத்
தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன்
அணிகொள்தில்லை கண்டேன் "

என வரும் திருவாசகத்திற் குறிக்கப்படும் அத்தலம், இதனின் வேறானதாகும்.

திருக்குற்றாலம் என்னும் இத்தலம் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தென்காசி என்னும் நகரத்திற்குத் தென்மேற்கே சுமார் நான்கு கல் தொலைவில் இருக்கின்றது. இத்தலம், கடல்மட்டத்திற்கு மேல் சுமார் 550 அடி உயரத்தில் உள்ளது. குற்றாலமலை தனது உச்சியில் மூன்று சிகரங்களைக் கொண்டதாகத் திகழ்கின்றது. அதனால் இதற்குத் திரிகூடமலை, திரிகூடாசலம் என்னும் பெயர்களும் வழங்கும்.

இம்மலையில் தேக்கு, மயிலை, கோங்கு, அத்தி, புன்னை, ஆல், இலுப்பை, மா, பலா, வாழை, கமுகு முதலிய மரங்கள் எங்கும் வளர்ந்து காணப்படும். மல்லிகை செண்பகம் மகிழ் முல்லை வெட்சி பாதிரி முதலிய மலர்கள் ஆங்காங்கே பூத்து நறுமணம் பரப்பும். எங்கும் பச்சைப் பசேல் என்று செடிகளும், கொடிகளும், அரிய சிறந்த பலவகையான மூலிகை

களும் வளர்ந்து படர்ந்திருக்கும். இயற்கையன்னை இப்பகுதிகளில் எழில் மிகுந்த தோற்றத்துடன் பொங்கிப் பொலிந்து இளையற்று விளங்குகின்றாள்.

"வம்பார் குன்றம் நீடுயர்
சாரல் வளர் வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண்டு
யாழ்செய் குற்றாலம்"

"செல்வம் மல்கு செண்பகம்
வேங்கை சென்றேறிக்
கொல்லை முல்லை மெல்லரும்பு
ஈனும் குற்றாலம்"

"நீலநெய்தல் தண்சுனை சூழ்ந்த
நீள் சோலைக்
கோல மஞ்ஞை பெடையோடு
ஆடும் குற்றாலம்"

என்றெல்லாம் பலப்பல வகைகளில், திருஞானசம்பந்தப் பெருமான் தமது தேவாரப் பதிகத்தில், திருக்குற்றாலத் தலத்தின் இயற்கையழகுகளை இனிதெடுத்து விளக்கிப் பாடியிருக்கின்றார்.

திருக்குற்றாலம் என்றதும் எல்லோருடைய மனத்திலும் அருவியின் நினைவே முதற்கண் எழும். இங்கு வடவருவி ஐந்தருவி தேனருவி செண்பக அருவி முதலிய அருவிகள் உள்ளன. இவ்வருவிகளில் நீராடினால், உடல்நலம் பெருகுவதுடன், மனம் தூய்மையும் தெளிவும் அடைகின்றது.

"ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்"

என வரும் திருக்குற்றாலக் குறவஞ்சி வரிகள், இவ்வுண்மையைச் செவ்வி தின் வலியுறுத்தும். அதனால் திருக்குற்றாலம், ஒரு சிறந்த சுகவாசத் தலமாக விளங்கி வருகின்றது. சாரற் காலத்தில் பல்லாயிரக் கணக்கான பிரயாணிகள், இங்கு வந்து தங்கி நீராடி மகிழ்ந்து இன்புற்றுச் செல்வர்.

திருக்குற்றாலம், நடராஜப் பெருமான் சிறப்புற எழுந்தருளி விளங்கும் பஞ்ச சபைகளுள் ஒன்றாகும். பஞ்ச சபைகளாவன: கனகசபை (தில்லை), இரசிதசபை (மதுரை), தாமிரசபை (திருநெல்வேலி), இரத்தின சபை (திருவாலங்காடு), சித்திரசபை (திருக்குற்றாலம்) என்பனவாகும். கலைகளுள் மிக்க பழமை வாய்ந்தது சித்திரமே யாகலின், சித்திரசபையாகிய திருக்குற்றாலமே, ஏனைய பிற தலங்களைவிட ஒருவகையில் மிகவும் பழமை வாய்ந்தது என்பர். இது மட்டும் அல்லாமல், சத்தி பீடங்கள் எனப்படும் 64 தலங்களுள், பராசக்தி பீடம் (தரணிபீடம்) எனப் புகழ் பெற்றுச் சிறந்து விளங்குவது திருக்குற்றாலம். இங்குள்ள அம்பிகையினை மணிவாசகர், "குழல்வாய் மொழி மங்கை" எனத் தமது திருக்கோவையாரிற் குறிப்பிட்டுப் புகழ்ந்து போற்றியுள்ளார்.

"குற்றாலத் தமர்ந்துறையும்
கூத்தாவன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே"

என்று மணிவாசகரும்,

"உற்ருர் ஆருளரோ ?
உயிர்கொண்டு போம்பொழுது
குற்ருலத் துறை
கூத்தன் அல்லால் நமக்கு
உற்ருர் ஆருளரோ ?"

என்று திருநாவுக்கரசரும், இங்கேயுள்ள கூத்தப்பெருமானை இனிது போற்றித் துதித்து மகிழ்ந்துள்ளனர்.

எல்லாத் தலங்களுக்குமே தலமரம் என்பது ஒன்று உண்டு. ஆயினும் அத் தலமரங்களுக்கு என்று தனியே திருப்பதிகம் எதுவும் தேவார ஆசிரியர்களால் பாடப்பெறவில்லை. ஆனல் திருஞானசம்பந்தர் தமது தேவாரத்தில் "திருக்குறும்பலாத் திருப்பதிகம்" என்று தனியாக ஒரு திருப்பதிகம் அருளிச் செய்திருக்கின்ருர். வேதங்களே இங்குக் குறும் பலா மரமாக விளங்குகின்றன என்று திரிகூடராசப்பக் கவிராயர் பாடிய திருக்குற்ருலத் தலபுராணம் விவரித்துப் பாடியுள்ளது.

"வானரங்கள் கனி கொடுத்து
மந்தியொடு கொஞ்சும் ;
மந்திசிந்து கனிகளுக்கு
வான்கவிகள் கெஞ்சும் ;
தேனருவித் திரை எழும்பி
வானின்வழி ஒழுகும் ;
செங்கதிரோன் பரிக்காலும்
தேர்க்காலும் வழுகும் "

என்பன போன்ற அழகிய சிறந்த கவிதை வரிகளைக் கொண்ட திருக் குற்ருலக் குறவஞ்சி முதலிய பல நூல்கள், இத்தலத்தின் அருமை பெருமைகளை விளக்குகின்றன. இத்தலத்திற்கு அருகே இலஞ்சி, திருமலை, பைம்பொழில் என்னும் முருகன் தலங்களும், சிற்பக்கலை நலஞ்சான்ற தென்காசி, விசுவநாதசுவாமி கோயிலும் விளங்கி வருகின்றன.

திருக்குற்ருலம் கோயிலின் அமைப்பும், ஒருவகையில் தனிச் சிறப்பு வாய்ந்தது. கோயில்கள் பொதுவாகச் சதுரம், ஆமை, தாமரை, வட்டம் முதலிய வடிவங்களில் அமைந்திருக்கும். ஆனல், திருக்குற்ருலம் கோயிலோ, பிரணவ வடிவம் கொண்டு ஒரு சங்கைப் போல அமைந் திருக்கின்றது. கோயில் ஒரு சங்கின் வடிவில் அமைந்திருப்பது, மலையின்மேல் ஏறி நின்று காண்பவர்களுக்கு மிக நன்ருகத் தெரியும்.

முடிவுரை :

திருக்குற்ருலம் கோயில், தொன்றுதொட்டே மிக்க பெருமையுற்றுச் சிறந்து விளங்கி வருவதொன்ருகும். முதலாம் பராந்தகசோழன், முதலாம் இராஜராஜசோழன், பாண்டியன் சடையன்மாறன், மாறவர்மன் விக்கிரமபாண்டியன், சடாவர்மன் சுந்தரபாண்டியன், மாறவர்மன் குலசேகரபாண்டியன், பராக்கிரமபாண்டியன் முதலிய அரசர்கள் பலரின் கல்வெட்டுக்கள், இக்கோயிலில் காணப்படுகின்றன. இத்தகைய பற்பல சிறப்புக்கள் கொண்ட திருக்குற்ருல நாதசுவாமி திருக்கோயில் திருப் பணிகள் நடந்து வருகின்றன. திருக்குட நன்னீராட்டு விழா அண்மை யில் நடக்கவிருக்கின்றது. பக்தப் பெரியோர்கள் அவர்களால் இயன்ற அளவு பொருளுதவி செய்து திருக்குற்ருல நாதர் அருளைப் பெற வேண்டுகிருேம்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சேக்கிழார் புராணம்

## கொற்றவன்குடி உமாபதிசிவம் அருளிச்செய்த மூலமும்

### திருக்கயிலாய பரம்பரைத் திருவண்ணுமலை ஆதீனம் ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் அருளிய பதவுரையும்

பிரதி செய்தவர் : சேக்கிழார்தாசன் இராமசேஷன்

ஆளுடைய பிள்ளையார் திருமுறை 3, ஆளுடைய அரசு திருமுறை 3, ஆளுடைய நம்பிகள் திருமுறை 1, ஆக ஏழும்; திருவாதவூரடிகள் திருவாசகம் திருச்சிற்றம்பலக் கோவையார் சேர்ந்த திருமுறை 1 ம்; திருமாளிகைத்தேவர்-கருவூர்த்தேவர்-நம்பிகாடவர் கோன்-கண்டராதித்தர்-வேணுட்டடிகள்-திருவாலியமுதனர்-புருடோத்தமர்-சேதிராயராகிய இவ்வெண்மர் அருளிச்செய்த திருவிசைப்பாத் திருப்பதிகங்கள் இருபத்தெட்டும், சேந்தனர் அருளிச்செய்த திருப்பல்லாண்டு ஒன்றும் ஆக 29 ம் சேர்ந்த திருமுறை 1 ம்; திருமூலர் ஆண்டுக்கொரு திருமந்திரமாக மூவாயிரம் ஆண்டளவும் அருளிச்செய்த திருமந்திரமாலைத் திருமுறை 1 ம்; திருவாலவாயுடையார் சேரமான் பெருமாள் நாயனருக்கு அருளிச்செய்த திருமுகப் பாசுரம், காரைக்காலம்மையார் அருளிச்செய்த திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் இரண்டு, திருவிரட்டைமணிமாலை, அற்புதத் திருவந்தாதி, ஐயடிகள் காடவர்கோன் நாயனர் அருளிச்செய்த திருவெண்பா, சேரமான் பெருமாள் நாயனர் அருளிச்செய்த பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கயிலாய ஞானவுலா, நக்கீரதேவர் அருளிச்செய்த கயிலைபாதி காளத்திபாதியந்தாதி, திருவீங்கோய்மலை யெழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, திருவெழு கூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோபப்பிரசாதம், காரெட்டு, போற்றித் திருஅகவல், திருமுருகாற்றுப்படை, திருக்கண்ணப்பதேவர் திருமறம், கல்லாடனர் அருளிச்செய்த திருக்கண்ணப்பதேவர் திருமறம், கபிலதேவர் அருளிச்செய்த மூத்தநாயனர் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி, பரணதேவர் அருளிச்செய்த சிவபெருமான் திருவந்தாதி, இளம்பெருமானடிகள் அருளிச்செய்த சிவபெருமான். திருமும்மணிக்கோவை, அதிராவடிகள் அருளிச் செய்த மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை, பட்டணத்துப்பிள்ளையார் அருளிச்செய்த கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர்த் தொகை, நம்பியாண்டார் நம்பி அருளிச் செய்த திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் திருவிரட்டை மணிமாலை, கோயிற்

பண்ணியற் விருத்தம், திருத்தொண்டர் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக் கோவை, திருவுலாமாலை, திருக்கலம்பகம், திருத்தொகை, திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலை ஆகப் பிரபந்தங்கள் 40ம் சேர்ந்த திருமுறை 1ம்; ஆகிய பதினொன்றுடன் திருத்தொண்டர் புராணமென்னும் பெரியபுராணம் ஒன்றும் சேர்த்துப் பன்னிரண்டு திருமுறையாக வகுத்தனர் என்க.

தோடுசெய்ததிரு நெறிய செந்தமிழொ
 டொக்கு மென்றுரை தொடர்ந்து செய்
பேடுசெய்துநட ராசர்சந்நிதியி
 லேற்றினர்களிது பாலிசூழ்
நாடுசெய்ததவ நீடுகுன்றைவள
 நகரிசெய்ததவ நிகரிலாப்
பீடுசெய்தபகி ரதிகுலத்திலகர்
 சேக்கிழார் செய்த பெருந்தவம். 97

(இ-ள்): தோடு செய்த திருநெறிய செந்தமிழொ டொக்குமென்று-தோடுடைய செவியனென்று ஆளுடைய பிள்ளையார் முற்பாசுரமெடுத்தோதியருளிய தேவாரத் திருமுறையோடு இஃதும் ஒப்பாகுமென்று; உரைதொடர்ந்து செப்பேடு செய்து-யாவரும் எடுத்துக் கூறி செப்பேட்டிலெழுதி; நடராசர் சன்னிதியிலேற்றினர்கள்-நடேசப்பிரான் சந்நிதியில் வைத்தார்கள்; இது பாலிசூழ் நாடு செய்த தவம்-இவ்வாறு செய்தது பாலாறு சூழ்ந்த தொண்டைநாடு செய்ததவம்; நிகரிலாப் பீடு செய்த பகிரதி குலத்திலகர்-ஒப்பில்லாத பெருமை பொருந்திய கங்கை குலதிலகராகிய; சேக்கிழார் செய்த பெருந்தவம்-சேக்கிழார் செய்த பெரிய தவம். (எ-று).

ஆயவேலையன பாயனிந்நிலைமை
 யாதலாலனுசர் பாலரு
வாயரெங்குள ரெனப்பணிந்திரு
 மருங்குநின்றவர் விளம்புவார்
தூயகுன்றைநகர் மீதுதம்பெயர்
 துலங்கவோர்குள மமைத்தபி
னேயநாகையர ஞர்திருப்பணி
 யியற்றியவ்விடை யிருந்தனர். 98.

(இ-ள்): ஆயவேலை அநபாயன்-அப்பொழுது அநபாய சோழன்; இந்நிலைமையானதால்-சேக்கிழார் நாயனர் தன்மை இவ்வாறு தவவேடம் பூண்டு சிவஞானச் செல்வராயிருத்தலால்; அநுசர் பாலருவாயர் எங்குளரென-இவர்க்கிளைஞராகிய பாலருவாயர் எங்கிருக்கின்றனர் என வினவ; இருமருங்கு நின்றவர் பணிந்து விளம்புவார்-இரு பக்கத்திலுமிருந்தவர்கள் வணங்கிச் சொல்லுவார்கள்; தூயகுன்றை நகர்மீது தம் பெயர் துலங்க-மேன்மைமிக்க குன்றத்தூரில் தமது பெயர் விளங்கும்படி; ஓர் குளமமைத்தபின்-பாலருவாயன் கேணி

யென்று ஒருதடாகம் அமைத்தபின்பு; ஏயநாகையரனார்-பொருந்தும்படி திருநாகேச்சுரரது; திருப்பணி யியற்றியவ்விடையிருந்தனர்-ஆலயத்திருப்பணியுஞ் செய்து கொண்டு அவ்விடத்திலிருக்கின்றனர். (எ-று).

என்று சொல்லவவர் தமையழைத்தரச
 னிவரமைச்சரிவர் பட்டமு
மன்றன்மாலைபுனை தொண்டைமானென
 வகுத்தபின்றமது மண்டல
மன்றுவற்பம்வர வந்தடைந்தவரை
 யாற்றல்செய்து தொண்டைமண்டல
நின்றுகாத்தபெரு மானெனத்தமது
 பெயரையெங்கணு நிறுத்தினர். 99

(இ-ள்): என்று சொல்லவரசனவர் தமையழைத்து-என்று சொல்ல அநபாய சோழன் அவரை வரவழைத்து; இவரமைச்சரிவர் பட்டமு மன்றன்மாலை புனைதொண்டை மானென வகுத்தபின்-(இது முதல்) இவரே மந்திரி இவருக்குப் பட்டப் பெயரும் நறுமணங் கமழும் மாலை யணிந்த தொண்டை மானென்று சொல்லிய பின்பு; தமது மண்டல மன்று வற்பம்வர-தமது தொண்டை நாட்டில் அக்காலத்தில் கருப்பு வர; வந்தடைந்தவரை யாற்றல் செய்து-அங்கிருந்து வந்து சேர்ந்த வர்களையெல்லாம் ஆதரவை செய்து; தொண்டை மண்டல நின்று காத்த பெருமானென-தொண்டை மண்டலங்காத்த பெருமானென; தமது பெயரை யெங்கணு நிறுத்தினர்-தமது பெயரை எட்டுத்திக்கிலும் நிலை நிறுத்தினர். (எ-று)

இவ்விரண்டுங் குளகம்.

தொண்டர்சீர்பரவு சேக்கிழார்குரிசி
 றூயதில்லைநகர் தன்னிலே
பண்டுமூவர்பதி கத்துவந்தவறு
 பத்துமூவர்கதை தனையுணர்ந்
தண்டவாணரடி யார்கடம்முட
 னருந்தவந்தனி லிருந்துபி
னிண்டைவைத்தசடை யம்பலத்தவ
 ரெடுத்தபாதநிழ லெய்தினர். 100

(இ-ள்): தொண்டர்சீர்பரவு சேக்கிழார் குரிசில்-அடியார்கள் சிறப்பினைத் துதிசெய்த சேக்கிழார் நாயனர்; தூயதில்லை நகர் தன்னில்-தூய்மையாகிய தில்லை மாநகரத்தில்; பண்டுமூவர் பதிகத்துவந்த-பழமையான மூவர்களுடைய திருப்பதிகத்திற் சொல்லிய; அறுபத்து மூவர் கதைதனை யுணர்ந்து-அறுபத்து மூவர் சரித்திரத்தைத் தியானஞ் செய்து கொண்டு; அண்டவாணரடியார் கடம்முடன்-சிவனடியார்களுடன்; அருந்தவந்தனிலிருந்துபின் - அருமையாகிய தவத்திலிருந்து பிறகு; இண்டை வைத்த சடையம்பலத்தவர்-இண்டைமாலையைத் தரித்த நடேசப்பிரான்; எடுத்த பாத நிழலெய்தினர்-குஞ்சிதபாத நிழலிலடைந்தனர். (எ-று) ஏ-அசை.

வாழிதில்லைமணி மன்றுளென்றுநட
மாடுமங்கணர் மலர்ப்பதம்
வாழிகாழிநகர் வாழவந்த திரு
நெறியராதிபதி வள்ளருள்
வாழியன்பர்திரு நீறுமிட்டதிரு
முண்டமுந்துவய கவசமும்
வாழிகுன்றைமுனி சேவையாதிதிரு
வாய்மலர்ந்தருள் புராணமே. 101

(இ-ள்): தில்லைமணி மன்றுளென்று நடமாடும்-தில்லையின்கண் அழகிய சிற்சபையினிடத்துச் சதாநடனஞ் செய்தருளும்; அங்கணர் மலர்ப்பதம் வாழி—நடேசப்பிரான் மலர்த்திருவடிகள் வாழ்க; காழிநகர் வாழவந்த-சீகாழியானது வாழும்படி திருவவதாரஞ் செய்தருளிய; திருநெறிய ராதிபதி வள்ளல்தாள் வாழி-திருநெறித் தலைவராகிய திருஞானசம்பந்த சுவாமிகள் முதலாகப் பதித்தன்மையடைந்த அடியார்களது திருவடிகள் வாழ்க; அன்பரிட்ட திருநீறுந் திருமுண்டமும்—அடியார்க்குரிய விபூதியும் திரிபுண்டரமும்; துவயகவசமும் வாழி—உத்தூடனம் உருத்திராக்கமும் வாழ்க; குன்றைமுனி சேவையாதி-குன்றத்தூரில் அவதரித்துள்ள சேக்கிழார் நாயனர்; திருவாய் மலர்ந்தருள் புராணம் வாழி—திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராணம் வாழ்க. (எ-று) ஏ-அசை.

தேசிலங்குமுகில் குன்றையாதிபதி
தொண்டர்சீர் பரவு சேக்கிழார்
வாசலன்றுமுத லின்றுகாறுமினி
மேலும் வாழையடி வாழையாய்
வீசுவதென்றன்மணி மண்டபத்தரசு
வீற்றிருக்குமுடி மன்னருக்
கீசனன்பர்கள் புராணமுஞ்சொலி
யமைச்சுமாகி நலமெய்துவாம். 102

(இ-ள்): தேசிலங்குமுகில் குன்றையாதிபதி—ஒளியுடனே விளங்குகின்ற கவி மேகமாகிய குன்றை நகர்த் தலைவரான; தொண்டர் சீர் பரவு சேக்கிழார் வாசல்—அடியார்கள் சிறப்பினைப் பாடியருளிய சேக்கிழார் நாயனர் மரபு; அன்று முதலின்றுகாறுமினி மேலும்-அந்நாள் முதல் இந்நாள் வரையும் இனிமேலும்; வாழையடி வாழையாய்—வாழையடி வாழையா யோங்க; தென்றல் வீசு மணிமண்டபத்து—தென்றற் காற்று வீசும்படி இரத்தின மண்டபத்தில்; அரசு வீற்றிருக்கு முடி மன்னருக்கு-வீற்றிருக்கின்ற சோழர்களுக்கு; ஈசனன்பர்கள் புராணமுஞ்சொலி-திருத்தொண்டர் புராணமுஞ் சொல்லிக் கொண்டு; அமைச்சுமாகி நலமெய்துவாம்-மந்திரிகளுமாகி நன்மைபெற்றிருக்கும். (எ-று) ஆல்-அசை.

அண்டவாணர் தொழு தில்லையம்பலவ
ரடியெடுத்துலகலாமெனத்
தொண்டர்சீர்பரவு சேக்கிழான் வரிசை
துன்றுகுன்றைநக ராதிபன்
றண்டகாதிபதி திருநெறித்தலைமை
தங்குசெங்கைமுகில் பைங்கழற்
புண்டரீகமலர் தெண்டனிட்டுவினை
போக்குவார்பிறவி நீக்குவார். 103

(இ-ள்): அண்டவாணர் தொழு தில்லையம்பலவர்-தேவர்கள் யாவருந் தொழுகின்ற நடேசப்பிரான்; உலகெலாமென அடியெடுத்து-உலகெலாமென்று முதலடி யெடுத்துக் கொடுத்தவாற்ருல்; தொண்டர்சீர் பரவு சேக்கிழான்-அடியார்கள் சிறப்பினைத் துதிசெய்த சேக்கிழார் என்பவரும்; வரிசைதுன்று குன்றை நகராதிபன்-சிறப்புமிக்கக் குன்றை நகருக்கதிபரும்; தண்டகாதிபதி-தண்டகநாட்டுத் தலைவருமாகிய; திருநெறித் தலைமைதங்கு-திருநெறித் தலைமை நிலைபெற்ற; செங்கை முகில் பைங்கழற் புண்டரீகமலர்-வள்ளன்மை மிக்க மேகத்தையொத்த அருண்மொழித் தேவரது திருவடித் தாமரைகளுக்கு; தெண்டனிட்டு வினை போக்குவார் பிறவி நீக்குவார்-தெண்டனிட்டு தீவினைகளை நீக்கிக் கொள்கின்றவர்களே பிறவியையும் நீக்கிக் கொள்பவராவர். (எ-று)

(வேறு)

சிறப்புப் பாயிரம்

திருக்கிளருங் கயிலைமலைக் காவல்பூண்ட
செல்வமலி திருநந்தி மரபில்வந்து
கருக்குழியி லெமைவீழா தெடுத்தாட் கொள்ளுங்
கருணைமிகு மெய்கண்ட தேவர்தூய
மருக்கிளர்தாள் பரவுமரு ணந்திதேவர்
மகிழுமறை ஞானதே வருக்கன்பாகி
யிருக்குமுமா பதிதேவர் சேக்கிழார்த
மிசைப்புராணம் முரைத்தா ரென்பமாதோ. 104

(இ-ள்): திருக்கிளருங் கயிலைமலைக் காவல் பூண்ட-முத்திச் செல்வம் விளங்குகின்ற திருக்கயிலாயத்தைக் காவல் செய்யும்; செல்வமலி திருநந்தி மரபில் வந்து-அதிகாரமிக்க நந்தி தேவர் பரம்பரையில் அவதாரஞ் செய்து; கருக்குழியிலெமை வீழா தெடுத்தாட்கொள்ளும்-பிறவிக்குழியில் வீழாவண்ணம் அடியோங்களை எடுத்தாட்கொள்ளும்; கருணைமிகு மெய்கண்ட தேவர்-கிருபை மிகுந்த மெய்கண்ட தேவரது; தூயமருக்கிளர்தாள் பரவுமருணந்தி தேவர்மகிழு-தூய்மையாகிய வாசனை மிக்க திருவடியைத் துதிக்கும் அருணந்தி தேவர் மகிழும் படியான; மறைஞான தேவருக்கன்பாகி யிருக்குமுமா பதிதேவர்-மறைஞான சம்பந்த சிவாசாரியாருக்கு அன்பாய் வீற்றிருக்கும் உமாபதி சிவாசாரியார்; சேக்கிழார் தமிசைப் புராண முரைத்தாரென்ப-சேக்கிழார் நாயனார் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராண வரலாற்றை விரித்துச் சொல்லினர் என்று சொல்லுவார்கள். (எ-று)

மாது-ஓ. அசை.

உமாபதி சிவாசாரியர் அருளிய
சேக்கிழார் நாயனர் புராணம் முற்றிற்று.

## திருமாலடியார்

# இராமானுசர்

பேராசிரியர் திரு. கா. அ. மணவாளன், எம்.ஏ., பி.ஓ.எல்.

## (19)

**மைசூர் நாட்டிற்கு எழுந்தருளுதல்**

வேடர்களால் அன்பாக உபசரிக்கப்பட்ட இராமானுசர், அவர்களுக்கு நல்லுபதேசங்களைக் கூறி ஆசீர்வதித்தார். சில நாட்களுக்குப் பிறகு உடன் வந்த நாற்பத்தைந்து அருமைச் சீடர்களையும் அழைத்துக் கொண்டு மேல் நாட்டிற்குப் புறப்பட்டார். வேடர்கள் பல காத தூரம் இராமானுசருக்குக் காவலாக வந்து, பின்பு விடைபெற்றுப் போயினர். வழியில் ஒரு கிராமத்தில் தங்கியிருக்கும் பொழுது எதிர்பாராத விதமாக அங்கு கொங்குப்பிராட்டியைச் சந்தித்தார். இக்கொங்குப்பிராட்டி, முன்பே திருவரங்கத்தில் இராமானுசரைச் சரணடைந்து உபதேசம் கேட்டவர். பலவாண்டுகள் கழித்துப் பார்த்தமையால் ஒருவரையொருவர் எளிதில் அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் முதலில் தயங்கினர். பின்பு இராமானுசரே முதலில் கொங்குப்பிராட்டியை அடையாளங் கண்டு கொண்டார். பின்பு பிராட்டியும் இராமானுசரைத் தன் வீட்டிற்கு அழைத்துப் போய் பெரிய உபசாரங்களைச் செய்தார்.

மைசூர் நாட்டுக்கு இராமானுசர் செல்ல வேண்டுமென்ற விருப்பத்தையறிந்த கொங்குப்பிராட்டி, அவ்வூர் மக்களைத் திரட்டி இராமானுசருக்கும் அவருடைய சீடர்களுக்கும் ஒருவித ஆபத்தும் வாராவண்ணம் துணையாக அனுப்பி உதவி செய்தார். இராமானுசரும் முதன் முதலில் மைசூர் நாட்டின் ஒரு பகுதியான தொண்டனூருக்கு வந்து சேர்ந்தார். அக்காலத்தில் விட்டலதேவராயன் என்ற ஜைன அரசன் அந்த நாட்டுக்கு அரசனாக இருந்தான். அவனுக்கு அருமை மகள் ஒருத்தி இருந்தாள். அவள் சித்தம் கலங்கிப் பேய் பிடித்தவள் போல் எதிலும் நாட்டமில்லாமல் நோய்வாய்ப்பட்டிருந்தாள். அரசன் எவ்வளவோ வைத்தியம் செய்தும் அவள் நோய் தீரவில்லை. பல மந்திர தந்திரங்களும் பயனற்றுப் போயின. இப்படியிருக்கும் நாளில் 'தொண்டனூர் நம்பி' என்ற பாகவதர் அரண்மனையில் அப்பெண்ணை ஒருநாள் பார்த்தார். நம்மூருக்குப் புதிதாக வந்திருக்கும் இராமானுசரால் இப்பெண்ணின் நோயைக் குணப்படுத்த முடியுமே என்று சிந்தித்தார். உடனே அரசரிடம் சென்று, இராமானுசருடைய தவ ஒழுக்கத்தையும் பேரறிவையும் வெகுவாகப் புகழ்ந்து, அவரால் அரசகுமாரியின் நோயைத் தீர்க்க முடியும் என்று கூறினார்.

விட்டலதேவன் என்ற அந்த அரசனே ஜைன சமயத்தைச் சார்ந்தவன். அவனுக்கு இராமானுசரிடம் முதலில் நம்பிக்கை பிறக்கவில்லை. எனினும் பலர் வற்புறுத்தவே ஒருவாறு இசைந்தான். அப்படி இராமா

நுசர் தம்மகளின் நோயைப் போக்கி விடுவாராகில் அவரையே யான் அரசகுருவாகக்கூட ஏற்றுக்கொள்வேன் என்றும் கூறினன். உடனே அமைச்சர் சிலரை அனுப்பி இராமாநுசரை அழைத்து வருமாறு பணித்தான்.

இராமாநுசரும் தொண்டனூர்நம்பி முதலானவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, அரண்மனைக்குச் சென்றார். பெண்ணைப் பார்த்து, இறைவனிடம் தியானம் செய்து அருள்புரிய வேண்டினார். பின்பு தொண்டனூர்நம்பி போன்றவர்கள் இராமாநுசரின் ஸ்ரீ பாத தீர்த்தத்தாலேயே இவள் நோய் தீருமென்று கூறினர். அப்படியே இராமாநுசருடைய ஸ்ரீ பாத தீர்த்தத்தாலேயே அப்பெண்ணின் நோயும் குணமாகி விட்டது. பிறகு அரசனும் அவன் குடும்பத்தாரும் இராமாநுசருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி ஸ்ரீ வைஷ்ணவர்களாகி விட்டார்கள். இராமாநுசரும் தன்னை அடி பணிந்த விட்டலதேவனுக்கு விஷ்ணுவர்த்தனராயன் என்ற தாஸ்யநாமத்தைச் சூட்டினார். இந்த செய்தி மைசூர் நாட்டின் பல இடங்களில் பரவவே, ஆயிரக்கணக்கான ஜைனர்கள் இராமாநுசருடைய பெருமையை அறிந்து அவரைச் சரணடைந்து வைணவ சமயத்தை மேற்கொண்டனர்.

### திருநாராயணபுரம் எழுந்தருளுதல் :

இராமாநுசர் சிலகாலம் அத்தொண்டனூரில் தங்கியிருந்து பின்பு சீடர்களுடன் திருநாராயணபுரம் நோக்கிப் புறப்பட்டார். புராணங்களில் இவ்வூர் 'யதுகிரி' என்றும், 'யாதவாத்ரி' என்றும் வழங்கப்பட்டுள்ளது. தமிழர்கள் இவ்வூரை மேல்கோட்டை என்று கூறுகின்றனர்.

இராமாநுசர் தம் சீடர்களுடன் மேல்கோட்டை என்னும் திருநாராயணபுரம் நோக்கிச் சென்று கொண்டிருக்கும்போது, வழியில் ஓரிடத்தில் துளசியின் பரிமளம் அதிகமாக வீசியதை உணர்ந்தார். அவ்வாசனை வரும் திசையையே நோக்கி அவரும் பயணமானார். அங்கு எதிரில் பெரிய துளசிக்காடு ஒன்றைக் கண்டார். மேலும் சில பசுக்களையும் கன்றுகளையும் கண்டார். அவற்றுள் ஒரு பசு ஒரு புற்றின்மேல் அளவற்ற பாலைச் சொரிந்து கொண்டிருப்பதைப் பார்த்தார். உடனே வேகமாக அந்த இடத்திற்குச் சென்றார். அங்கு பெருமாளின் திருஉருவம் ஒன்று மண்ணில் புதைந்திருப்பதைக் கண்டார். பெருமகிழ்ச்சி அடைந்தார். உடன் வந்த சீடர்களின் உதவியால் அந்தப் பெருமாளின் உருவத்தை மெதுவாகப் பெயர்த்தெடுத்தார். சகல லக்ஷணங்களோடு ஒருவித சிதைவுமின்றி அவ்வுருவம் காணப்பட்டது.

### விஷ்ணுவர்த்தனன் கைங்கரியம் :

இராமாநுசர் உடனே விஷ்ணுவர்த்தனனுக்கு ஆளை அனுப்பி வரவழைத்தார். "எங்கெல்லாம் துளசியின் பரிமளம் இருக்கிறதோ அங்கெல்லாம் பகவான் விஷ்ணுரூபியான நாராயணன் வாசம் செய்வதாகச் சாத்திரங்கள் கூறுகின்றன. ஆதலால் இந்த துளசிக் காட்டில் பகவானுடைய சாந்நித்தியம் மிகுதியாக இருக்கவேண்டும். அதற்கு ஏற்றாற்போல் இந்த விக்கிரகமும் கிடைத்துள்ளது. விஷ்ணுவர்த்தனன் என்ற உன் பெயர் நிலைக்கும் படியாக நீ இந்தக் கோயிலைக் கட்டிப் பெருமாளைத் தாபித்து விழாக்களையும் எடுக்க வேண்டும்" என்று பணித்தார்.

விஷ்ணுவர்த்தனனும் குருவின் ஆணையைத் தலைமேல் கொண்டு அங்கேயே ஒரு பெரிய கோயிலைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்தான். அதோடு பெரிய குளத்தையும் தோண்டத் திட்டமிட்டான். எல்லாம் விரைவில் நடந்தேறின. இராமானுசர் தாமே அந்த விக்கிரகத்திற்கு திருநாராயணன் என்று பெயர் சூட்டிப் பிரதிஷ்டை செய்தார். பாஞ்சராத்திர ஆகம முறைப்படி பூஜை முறைகளுக்கு ஏற்பாடு செய்தார்.

பின்பு அங்கு தோண்டப்பட்ட குளத்திற்கு கலியாணபுஷ்கரணி என்று திருநாமமிட்டார். அதற்கு ஏற்றாற்போல் அக்குளத்தின் ஒரு மூலையில் வைணவர்கள் தங்கள் நெற்றியில் இட்டுக்கொள்ளும் வெள்ளைத் திருமண் பால்போல் பொங்கி வந்ததைக் கண்டு மகிழ்வெய்தினர்.

உத்சவ மூர்த்தியைத் தேடினர்:

இராமாநுசர் திருநாராயணன் என்ற பெயரால் கிடைத்த மூல விக்ரகத்தைப் பிரதிட்டை செய்தாரே தவிர, உத்சவ விக்கிரகமில்லாமையால் சரியாக விழாக்களைச் செய்ய முடியாமல் வருந்தினர். அந்தக் காலத்தில் டில்லியில் முகம்மதியர்களுடைய ஆட்சி நடைபெற்று வந்தது. அவர்களுடைய படையெடுப்பால் இந்துக்களுடைய பல கோயில்கள் இடிக்கப்பட்டன. விக்கிரகங்கள் களவாடப்பட்டன. பொன்னும் பொருளும் சூறையாடப்பட்டன. அந்த சமயத்தில் திருநாராயணப் பெருமாளின் உத்சவ விக்கிரகமும் காணமற் போய்விட்டது.

'இராமப்பிரியர்' என்ற அந்த உத்சவ விக்கிரகம் டில்லியில் ஆட்சி புரிந்து வந்த பாதுஷாவின் அரண்மனையிலிருப்பதாக இராமாநுசர் தெரிந்து கொண்டார். உடனே டெல்லி சென்று அந்த அரசனிடம் உதசவ விக்கிரகத்தைத் தயவுசெய்து அளிக்க வேண்டுமென்று நயமாகக் கேட்டுக்கொண்டார். அவ்வரசனும் தான் கொள்ளையடித்து வந்த பொருள்களைக் காட்டி, இவைகளில் தாங்கள் விரும்பும் விக்கிரகம் இருந்தால் எடுத்துச் செல்லலாம் என்று அனுமதி அளித்தான். ஆனால் அங்கு அந்த விக்கிரகம் காணப்படவில்லை. பின்பு அரண்மனைச் சேவகர்களில் சிலர் இராமாநுசர் தேடும் விக்கிரகம் அரசமகளின் அந்தப்புரத்தில் விளையாட்டுப் பொருளாக உள்ளது என்று கூறினர். இராமாநுசரும் அதுகேட்டு அரசன் அனுமதிபெற்று அந்தப்புரம் சென்று அரசகுமாரியிடம் வேண்டி விக்கிரகத்தைப் பெற்று விட்டார்.

இராமப்பிரியர் என்னும் அந்த விக்கிரகத்தைக் கண்டவுடன் இராமாநுசருக்கு உண்டான ஆனந்தத்துக்கு அளவே இல்லை. ஆனந்தக் கண்ணீர் பெருக அவ்விக்கிரகத்தைத் தம் மடியின் மீது அமர்த்திக் கொண்டார்; அணைத்து உச்சிமோர்ந்தார். 'என் செல்வப்பிள்ளையோ' என்று சொல்லிக் கண்ணீர் வடித்தார். இராமாநுசரால் திருநாராயணப் பெருமாளோடு சேர்த்து வைக்கப்பட்ட அந்த உத்சவ மூர்த்திக்கு இன்றும் 'செல்வப்பிள்ளை' என்றே பெயர் வழங்கி வருகிறது.

ஆலயப் பிரவேசம்:

இராமாநுசர் டில்லி அரசன் அனுமதியுடன் விக்கிரகத்தையெடுத்துக் கொண்டு வந்தாலும் வழியில் சில கொள்ளையர்கள் இராமாநுசரையும் அவருடைய சீடர்களையும் எதிர்த்துப் போராடி விக்கிரகத்தையும், அந்த விக்கிரகத்தின் சில ஆபரணங்களையும் கொள்ளையடிக்க முற்பட்டனர்.

அப்போது இராமாநுசர் அருகிலிருந்த ஹரிஜனங்கள் வாழும் குடிசைக்குள் ஓடி ஒளிந்து கொண்டார். ஹரிஜன மக்களும் இராமாநுசரை உபசரித்து உதவியதோடு அவருக்கு எவ்வித ஆபத்தும் வராமல் காத்துத் திருநாராயணபுரம் என்னும் மேல்கோட்டை வரையில் துணையாக வந்து உதவினர்.

கைம்மாறு கருதாது உதவிசெய்த மக்களை இராமாநுசர் போற்றி அவர்களுக்குத் திருக்குலத்தார் என்று பெயரைச் சூட்டினுர். அதோடு அக்கால வழக்கப்படி தீண்டாதவர்கள் என்று ஒதுக்கப்பட்டிருந்த அவர்களுக்குப் பல சலுகைகளை அளித்து, உயர்ந்த ஆகம வழிபாட்டோடு பூஜை நடந்து வரும் திருநாராயணன் கோவிலில் வழிபாட்டு உரிமையையும் வழங்கினுர்.

இவ்விதம் எந்தக் குலத்தினரையும் ஸ்ரீ வைஷ்ணவத் தொண்டக் குலத்தினராக்கிய பெருமை இராமாநுசருக்கு உண்டு. பின்பு இராமாநுசர் திருநாராயணபுரத்தில் பலவாண்டுகள் தங்கிச் சீடர்களுக்கு ஸ்ரீ பாஷ்யத்தையும், திருவாய் மொழியையும் உபதேசம் செய்துவந்தார். கோயில் சீர்திருத்தங்களையும் செய்து பல விழாக்களை நடத்திஞர். திருநாராரணபுரத்திலும், தொண்டனூர் போன்ற ஜைனர்களுடைய ஊர்களிலும் பல வைணவ மடங்களை ஏற்பாடு செய்தார். அதோடு இயற்கையாகவே மலைச்சரிவிள்ள தொண்டனூரில் ஒரு பெரிய ஏரியையும் அமைத்துள்ளார்.

ஞானவெள்ளமாகிய இராமாநுசர் மேலைநாட்டு மைசூர் நாடெங்கிலும் நடந்து உயர்ந்த விசிட்டாத்துவிதக் கொள்கைகளையும், திருநாரணன் நெறியாகிய திருமால் நெறியையும் பரப்பி வந்தார்.

(தொடரும்)

---

# இனியவை கூறல்

வித்துவான் கா. சி. தனக்கோடி எம்.ஏ.,

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

அறத்தின் இலக்கணம் யாது? மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்தறன். அழுக்காறு, அவா, வெகுளியும் அவை காரணமாகத் தோன்றும் இன்னாச் சொல்லும் மனமாசுகளாம். இம்மாசுகள் நீங்கிய அளவில் உண்டாவது அறமாயின், ஒருவன் தூய்மையான சொற்களையே பேசுகின்றான் எனின் அவன் தூயோனாகின்றான். வேறு வகையாகச் சொல்ல வேண்டுமானால், எவன் ஒருவன் இனியவை கூறும் அறத்தைத் தன்விரதமாகக் கொண்டொழுகுகின்றானோ அவனே மனமாசு நீங்கப் பெற்றவனாகின்றான்.

மனமாசு நீங்கியவன் கூறும் மொழியே வாய்மை. அகந்தூய்மை வாய்மையால் காணப்படுமன்றோ? அவ்வாய்மையே இன்சொல்லாம். எவ்வாறு? வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும் தீமையிலாத சொலல். இத்தகு சிறப்பு வாய்ந்த இன்சொல் பேசுகின்றவன் அறவோன் எனப்படுகின்றான். அவனே அந்தணன். அந்தணன் இயல்பு யாது? எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுதல். ஆதலால் இனியவை கூறும் பண்பாளன் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் நலத்தினால் அருளாளனும் ஆகின்றான். அருளாளனது குணம் உள்ளி உள்ளவெலாம் உவந்தீதல். இந்த ஈகைப் பண்புடையவன் தன் அகமும் முகமும் மலர இனியவை கூறத் தன்னை நாடியவர்களுக்கு வேண்டியதொரு பொருளை ஈந்து உதவுகின்றான்.

இனியவை கூறும்பண்புடன் ஈகைப்பண்பும் உடையவன் வாழ்வில் வளம்பெற வாழ்கின்றான். துன்புறூஉம் துவ்வாமை அவனை அணுகுவதில்லை. அவன் வழுக்கியும் தீயவற்றைத் தன் வாயால் கூறான். ஒருகால் அவன் கடுஞ்சொல் கூறினாலும், அது இன்சொல் போலவே கேட்போர்க்குப் பயனளிக்கும். மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல்லும் இன்சொல்லே யன்றோ! ஆதலால் அவன் கூறும் ஒவ்வொரு சொல்லும் பெரும்பயன் அளிக்கும் சொல்லாகவே அமைகின்றது. அச்சொல், சேற்று நிலத்தில் நடக்கும் ஒருவனுக்கு ஊன்றுகோல் உதவுவதுபோல் வாழ்வில் தளர்ச்சியுறும் மக்களுக்குநின்று உதவுகிறது. ஆதலால் அவன் கூறும் ஒவ்வொரு சொல்லும் மக்களினம் ஏற்றுப் போற்றி நடக்கும் ஆணைமொழியும் ஆகின்றது.

> "இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
> தான்கண் டனைத்திவ் வுலகு."

அவனே சிறந்த குடிமகன் ஆகின்றான். பிறந்த குடியின் உயர்வு தாழ்வு, ஒருவன் பேசும் சொற்களினாலேயே வெளிப்படுகின்றது. நிலத்தில் கிடந்தமை கால்காட்டும்; காட்டும் குலத்தில் பிறந்தார் வாய்ச்சொல் இன்சொல் பேசும் இயல்பினன் விளையாட்டாகக் கூடப்பிறர் உள்ளம் புண்படும் வகையில் பேசமாட்டான். அவ்வளவு கண்ணுங் கருத்துமாய் இவ்வறத்தைக் கடைப்பிடிப்பான். நகை, ஈகை, இன்சொல், இகழாமை நான்கும் இக்குடிமகனின் பண்புகளாகின்றன.

அவனே சான்றோன் என உலகோரால் போற்றப் பெறுகின்றான் இத்தகைய சான்றோனைப் பெற இவன் பெற்றோர் என்ன தவம் செய்தார்களோ என உலகம் அவன் அருந்திறனைக் கண்டு வியக்கின்றது. இத்தகைய சான்றோனே அன்பு வழிப்பட்டுக் கடமையாற்றும் இல்லறத்தானைக் காட்டிலும் தலையாயவன் ஆகின்றான். இம்மை நலனும் மறுமை நலனும் ஒருங்கே துய்க்கப் பெறுகின்றான். சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும் இம்மையும் இன்பம் தரும் அன்றோ; இத்தகு விழுமியோனால்தான் உலகம் நிலைபெற்று நிற்கின்றது.

மக்கள் உள்ளம் உரை உடலால் அறம் புரிய வேண்டியவராகின்றனர். உள்ளத்தால் உண்ணும் அறத்தை உண்மை என்றும், வாக்கினால் பேசும் அறத்தை வாய்மை என்றும், உடலால் இயற்றும் அறத்தை மெய்ம்மை என்றும் போற்றிக் கடைப்பிடித்தனர் நம் முன்னோர். இம் முக்காரணங்களிலும் நடுநாயகமாக நிற்பது நாம் நாவால் நடத்தும் இனியவை கூறலாகிய இவ்வறம் புரிதல், ஒருவன் தன்னிடமுள்ள சுவை மிகுந்த இனிய கனியொன்று வேண்டும்பொழுது வேண்டுமிடத்தே நுகரும் எண்மையுடைத்தாகும்.

நாவின் செயலால் நடைபெறும் இன்சொல் கூறுதலாகிய இவ்வறம், தன்னைக் கடைப்பிடிப்பவனை அறவோனாய், அருளாளனாய் மாற்றி இம்மையின்பமும் மறுமை யின்பமும் ஒருங்கே துய்க்கச் செய்து தனக்குப் பின் நன்மக்களை நாட்டுக்கு நற்றொண்டாற்ற விட்டு, முடிவில் பிறப்பென்னும் பேதைமை நீக்கிச் சிறப்பென்னும் செம்பொருள் காணவும் வழி செய்கிறது.

> "கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
> குறுகத் தரித்த குறள்"

என்றார் இடைக்காடனார். அவர் உரையை மறுத்து,

> "அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
> குறுகத் தரித்த குறள்"

என்றார் ஔவையார்.

இவர் கூற்றுப்படி இக்கட்டுரையில் கூறிய கருத்துக்கள் அனைத்தும் கீழ்க்காணும் திருக்குறளில் கருக் கொண்டுள்ளதை எண்ணும்போது நம் நெஞ்சம் பாகாய் உருகுகின்றது.

> " இன்சொலால் ஈரம் அளைஇப் படிறு இலவாம்
> செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். திருக்குறள்—91.

வாழ்க திருவள்ளுவர் வாய்மொழி.

# அன்பே சிவம்

கவிஞர் பூங்குன்றன், எம்.ஏ.,

அன்பு என்பது வாழ்க்கை வழிகளை வகுத்துக் கூறும் நூல்களின் விழுப்பொருளாக விளங்கும் தன்மையது. அறம் முதலான நற்பண்புகட்கெல்லாம் அடிப்படையாய் அமைந்திலகுவது. பதியாகிய சிவனைப் பசுவாகிய ஆன்மா பற்றிக் கொண்டு பேரின்பம் துய்த்தலைத் தடுக்கும் ஆணவம் முதலான மும்மலங்களையும் அறுத்தெறிவதில் அன்புக்கு இணையாவது யாதொன்றுமில்லை. நிறைவான அன்பெய்தியவர்க்கு 'மும்மலம் வேறுபட்டொழிய மொய்த்துயிர் செம்மலர்த் தாளினைச் சேர்தல்' எளிது. இதனாலன்றோ மாணிக்கவாசகர், "இறைவனின் தாளை இறைஞ்சுங்கால்,

"ஆடகச்சீர் மணிக்குன்றே! இடையறா அன்புனக்கென்"
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள் எம்உடையானே!

என்கின்றார்.

இறைவன் அன்பு வடிவினனாகவே தோன்றி, அன்புடையார் மாட்டெல்லாம் அருள் திறங்களை நிகழ்விக்கின்றான். இறைவன் அன்புடையார்க்கு இன்பம் நல்கும் பொருட்டுத் தோற்றமளித்ததும், துணை நின்றதும், தொண்டு புரிந்ததும் அடியார்களின் வரலாற்றால் அறியக் கிடக்கின்றது.

பூக்கைக் கொண்டரனைப் போற்றுவதே நியதி. அன்பின் மிகுதியால் உணர்ச்சி வயப்பட்டு, "நீடோடு களியுவகை நிலைமை வரச் செயலறியார்" ஆகிய சாக்கிய நாயனார், "பாடோர்கல் கண்டதனைப் பதைப் போடும்" இறைவன் மீது எடுத்தெறிந்தார். இப்புதிய நியதியும் அன்பினால் ஏற்பட்டதாதலின்,

"மகவுமகிழ்ந் துவப்பார்கள் வன்மைபுரி செயலினால்
இகழ்வனவே செய்தாலும் இளம்புதல்வர்க் கின்பமே
நிகழுமது போலதற்கு நீள்சடையார் தாம்மகிழ்வார்"

என்ற சேக்கிழார் வாக்கின்படி இறைவர் பூரிப்போடேற்றுக் கொண்டார்.

இறைவனைத் தொழுவதற்கு நிலையிலும், கோலத்திலும் மாறுதல் இன்றியமையாததன்று. அன்பினால் மறவாமை ஒன்றே பெரிதும் வேண்டற்பாலது. இதனால்தான், சேக்கிழார் சாக்கிய நாயனார் வரலாற்றைச் சாற்றுங்கால்,

"எந்நிலையில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்றாள் மறவாமை பொருளென்றே
துன்னியவே டந்தன்னைத் துறவாதே தூயசிவந்
தன்னைமிகும் அன்பினால் மறவாமை தலைநிற்பார்." என்றார்.

இறைவன் அன்புக்காட்பட்டவன் என்றறிந்து அன்பின் வழியாக அவனைத் தேடி, அடைந்து, பேரின்பம் துய்த்தலே நாம் செயற்பாலது. தத்துவஞானி சாக்ரடீசு என்பார் "பேரின்பத்தை நாடி ஆன்மா மேற்கொள்ளும் பயணமே அன்பு" என்றார். வள்ளலாரும், இறைவனை,

"அன்பெனும் பிடியு ளகப்படு மலையே
அன்பெனுங் குடில் புகுமரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
அன்பெனுங் கரத்தம ரமுதே"

என்கின்றார். எனவே நாமும் "இன்னன் புருக்கி யிறைவனை யேத்துமின் முன்னன் புருக்கி முதல்வனை நாடுமின்" என்ற திருமூலர் வாக்குப்படி அன்பே வடிவான சிவனை அன்பால் வழிபட்டு உய்வோமாக.

# சமயபோதனை

பாடம் 11 | விஞக்கள் | பிப்ரவரி 1975

விஞக்கள் இந்த இதழ்க் கட்டுரைகள் பற்றியனவே ஆகும். விடைகளை முழு அளவு (Foolscape size) இரண்டு தனித் தாள்களில் நான்கு பக்கத்திற்குள் எழுதி இச்செயலகத்திற்கு 28-2-1975க்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவேண்டும். சந்தா எண், பெயர், வயது, முகவரி இவற்றைத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

மதிப்பெண் சமம்] [மதிப்பெண் 100

1. சாங்கியத்தின் கொள்கைகள் என்னென்ன ?
2. "சற்காரிய வாதம்" விளக்கம் தருக.
3. வாய்மை எனப்படுவது யாது? விளக்குக.
4. அறத்தின் இலக்கணம் யாது?
5. 'திரிபுராந்தகர்' திருவுருவச் சிறப்பென்ன?
6. 'நம்மிடம் அன்புப் பிச்சை பெற விரும்புபவன் யார்? விளக்கம் தருக.
7. பஞ்சசபைகள் என்னென்ன? சித்திர சபையின் சிறப்பென்ன?
8. முப்புரம் எரித்த வரலாறென்ன ?
9. 'ஆசு' என்ற சொல் எவ்வெப் பொருள்களில் கையாளப் பட்டிருக்கிறது?
10. இறைவனை அடைதற்குரிய வழிகள் என்னென்ன? அதன்படி வாழ்ந்து காட்டிய அருளாளர்கள் யாவர்? அவர்கள் எவ்வெப் பதவிகளைப் பெற்ருர்கள் ?

---

விடைகளை எழுதி உரிய அஞ்சல்தலை யொட்டிக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவேண்டும் :—


## "அருளோசை"

தமிழ்நாடு தெய்விகப் பேரவை,
9, மகாராஜா சூரியராவ் சாலை,
ஆள்வார்பேட்டை,
சென்னை-600018.

பழ-தரும ஆறுமுகம்

வரும் 11-3-75 அன்று மகா சிவராத்திரி விழா வருகின்றது. இச்சிவ னிரவை மிகநிறைவுடன் கொண்டாடுவீர்கள் என்பதில் ஐயமில்லை. பகலும் இரவும் என், ஒவ்வொரு கணமும் இறைவனுக்கே உரியவை தான்; என்ருலும், நம் ஆன்ருேர்கள் ஒவ்வொரு திங்களிலும் ஒவ்வொரு சிறப்பு வழிபாட்டை திருவிழாவை நமக்காக ஏற்படுத்தி வைத்திருக் கின்றனர். அந்த முறையில் மாசித் திங்களில் வருவது மகா சிவராத்திரி. இச்சிவனிரவில் அன்பர்கள் யாவரும் அருகிலுள்ள சிவன் கோவிலுக்குச் சென்று இரவு நான்கு யாமங்களிலும் தனித்தனியே திருமுழுக்கு (அபிஷேகம்), ஒப்பனை (அலங்காரம்), படைப்பு (நைவேத்தியம்), வழிபாடு (அருச்சனை) முதலியன சிறப்பாகச் செய்வித்து, அக்காலத்தில் சிவ புராணம் முதலான திருமுறைகள் ஓதி வழிபாடியற்றல் வேண்டும். இதனைத் திருநாவுக்கரசர் பெருமான் திருத்தாண்டகத்தில்,

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
　　பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
　　சொல்லுகேன் கேள்நெஞ்சே! துஞ்சாவண்ணம்
உற்றவரும், உறுதுணையும், நீயே! என்றும்
　　உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கேன் என்றும்
புற்றரவக் சச்சார்த்த புனிதா என்றும்
　　பொழில் ஆருரா என்றே போற்றுநில்லே!

என்று குறிப்பிடுகின்ருர். அந்த முறையில் சிவனிரவன்று தூங்காதே விழித்திருந்து, தோத்திரங்கள் பலபாடி தீங்கெல்லாம் தீர்ந்திடவே சிவபெருமான் திருவடியில் நீங்காத நினைவுடனும் நெறிமுறைகள் பிறழாதும் பாங்காக வழிபட்டுப் பலன் பெறவே வேண்டுகிறேம்.

எல்லாத் தவங்களிலும் மேலான நற்றவம் உண்ணாது, உறங்காது சிவபெருமான் திருவடியை வழிபடுவதேயாம். வழிபாட்டிற்குரிய சிறந்த தமிழ்மறை நம் திருமுறைகள். அவற்றுட் சிறந்தவை நால்வர் தமிழ்! அவற்ருல் உணர்த்தப் பெறுபவை: சீலம் (சரியை). நோன்பு (கிரியை), செறிவு (யோகம்), அறிவு (ஞானம்) எனும் நான்கு நெறிகள். அவை, நமக்கு உணர்த்துபவை நான்கு வழிகள் (மார்க்கங்கள்). அவை, இறைவனைத் தந்தையாகவும் நம்மைக் குழந்தையாகவும் கருதி வழி படுதல் (சத்புத்திர மார்க்கம்) இறைவனை ஆண்டாஞகவும், நம்மை அடிமையாகவும் கருதி வழிபடுதல் (தாசமார்க்கம்). இறைவனைத் தோழ ஞகவும். நாம் அவனுடைய உற்ற நட்பினராகவும் கருதி வழிபடுதல் (சகமார்க்கம்). இறைவனைத் தலைவனுகவும் நம்மைத் தலைவியாகவும் கருதி வழிபடுதல் (சன்மார்க்கம்). திருஞானசம்பந்தர், திருநாவுக் கரசர். சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நான்கு அருளாளர்களும் முறையே இந்நான்கு நெறிகளையும் கடைப்பிடித்து நமக்கு உணர்த்தி யிருக்கிருர்கள். இவற்ருல் நாம் பெறும் பயன்கள் (1) இறையுலகை உயிர்கள் அடைதல்-உலகாதல் (சாலோகம்). (2) இறைவனுடன் உயிர்கள் இருத்தல்-உடனுதல் (சாமீபம்), (3) இறையுருவை உயிர்கள் பெறுதல்-உருவாதல் (சாரூபம்). (4) இறைவனுடன் இரண்டறக் கலத்தல்-ஒன்ருதல் (சாயுச்சியம்) என்பன.

இவற்றை உணர்த்தவே இச்சிவனிரவில் நான்கு காலத் திரு முழுக்குகளும் வழிபாடுகளும் நிகழ்த்தப்பெறுகின்றன. இக்காலங்களில் மாணிக்கவாசகர் அருளிய சிவபுராணத்தையும் மற்ற போற்றித் திரு முறைகளையும் அன்பர்கள் தனியேயும் கூடியிருந்தும் ஓதுதல் மரபு. தீக்கை பெற்றவர்கள் 4 காலங்களிலும் சிவபூசை செய்தல்வேண்டும்.

உ

திருச்சிற்றம்பலம்

திருவருட்பா

(காட்சிக் களிப்பு)

பாலானைத் தேனானைப் பழத்தினானைப்
 பலனுறுசெங் கரும்பானைப் பாய்ந்துவேகாக்
காலானைக் கலைசாகாத் தலையினானைக்
 கால்என்றும் தலையென்றும் கருதற்கெய்தா
மேலானை மேல்நிலையேல் அமுதானானை
 மேன்மேலும் எனதுளத்தே விளங்கல்அன்றி
எலானை என்பாடல் ஏற்றுக்கொண்ட
 எம்மானைக் கண்டுகளித் திருக்கின்றேனே!

—திருவருட்பிரகாச வள்ளலார்

திருச்சிற்றம்பலம்



Edited, Printed at Peravai Achakam and Published by A. Narayanaswamy B. A., for the Tamil Nadu Deivika Peravai at No. 9, Maharaja Surya Rao Road, Alwarpet, Madras-600018.